விவாஹ விடுதலை

(இந்து மனைவியர்க்கு இன்றியமையாதது)

ஆசிரியர் :

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.

வெளியிடுவோர்:

S. தங்கவேலு,

திருச்சி.

ON

DIVORCE

(FOR HINDU WOMEN.)

BY

K. M. BALASUBRAMANIAM. B.A., B.L.,

PUBLISHER

S. THANGAVELU



ஈரோடு ஈ. வெ. இராமசாமிப் பெரியார், சுயமரியாதை இயக்க ஸ்தாபகர்.

This Book is Dedicated

TO

Sir. Hari Sing Gour Kt.

M. A., D. Lit., D. C. L., L. L. D., Bar-at-Law

AND

Member of the Legislative Assembly

As a Mark of Respectful

Appreciation of His Earnest and Ceaseless

Endeavours in the Cause of Hindu Reform

IN GENERAL

And in the Improvement

OF

The Indian Womanhood

IN PARTICULAR.

தோழர்
ஈ. வே. ராமசுவாமி அவர்களின் மதிப்புரை.

தோழர் K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் விவாக விடுதலை Divorce என்னும் ஒரு சிறு புத்தகம் எழுதி அதை என்னுடைய பார்வைக்கு அனுப்பி அதற்கு ஒரு சிறு மதிப்புரை எழுதவேண்டுமென்று விரும்பினர். புத்தகங்களுக்கு முகவுரை எழுதுவது என்பதை நான் புத்தக ஆசிரியரின் பெருமையை பொதுஜனங்களுக்கு அறிமுகப்படுத்தவும், புத்தகம் எழுதிய நோக்கத்தையும் புத்தகத்தில் கண்ட கொள்கையையும் மக்கள் உணரும்படிச் செய்வதற்கும் என்பதாகக் கருதுகிறேன்.

தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள் விஷயத்தில் அவரை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை என்பதே எனது அபிப்பிராயமாகும். ஏனெனில் தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இளவயதினரேயாயினும் அவரை அறிவு உலகம் ஏற்கனவே நன்ருய் அறிந்திருக்கிறது. சுமார் ஐந்து ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டும், அநேக மகாநாடுகளில் தலைமை வகித்தும், அவர் செய்துள்ள பிரசங்கங்கள் மூலமாகவும், "குடி அரசு", "ரிவோல்ட்", "நியூ டைம்ஸ்", "ஜஸ்டிஸ்", "சண்டே அப்சர்வர்" முதலிய பல பத்திரிகைகளில் எழுதிவந்த கட்டுரைகளின் மூலமாகவும் வாலிபரும் முதியோரும் ஆகிய அறிஞர்கள் அவரை நன்ருய் உணர்ந்திருக்கிருர்கள்.

அப்புத்தகம் எழுதியதின் நோக்கத்தையும், அதன் கொள்கையையும் பொறுத்தவரையிலும்கூட மக்கள் உணரும்படி செய்யவேண்டிய அவசியமில்லை என்பதே நமது

அபிப்பிராயமாகும். ஏனெனில் அப்புத்தகத்தின் பெயரி னாலும், விவாக விடுதலை கொள்கை எவ்வளவு அவசியம் என்பதற்கு நமது நாட்டில் அடிக்கடி ஏற்பட்டுவரும் சம்பவங்களாலும் அது மக்கள் யாவரும் உணர்ந்து இருக் கும் விஷயமேயாகும்.

விவாக விடுதலை என்பது ஒரு ஆணும் ஒரு பெண் ணும் திருமணம், கல்யாணம், விவாஹம் என்ற பெயர்க ளின் பேரில் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட வாழ்க் கைத்துணை ஒப்பந்தத்தை ரத்து (cancel) செய்து கொள்வதேயாகும். மேல்கண்டதான இந்த விவாக ரத்து கொள்கையானது உலகத்தில் ஆண், பெண் ஆகிய இரு சமூகத்தின் வாழ்க்கை இன்பத்துக்கு அவசியமானதே யாகும்.

ஏனெனில் விவாகம் என்பதை மனித சமூகம் அனு சரிக்கவேண்டிய அவசியமேற்பட்டதின் கருத்தெல்லாம் மனித வாழ்க்கையில் அவர்களது வாழ்நாள் இன்பத்துள் கழியவேண்டுமானால் ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண் ணுக்கு ஒரு ஆணும் வாழ்நாள்வரை கூடவே ஒருவருக் கொருவர் வாழ்க்கைத்துணையாய் இருந்து காலம் கழிப்ப தற்கேயாகும். இந்தப்படி வாழ்நாள் முழுவதும் கூடவே யிருந்து காலம் கழிக்கவேண்டிய தம்பதிகளின் வாழ்வு உண்மையாக இன்பத்துடன் கழியவேண்டுமானால் தம்பதிகள் இருவரும் ஒத்த குணம், ஒத்த அன்பு, ஒத்த நேசம் முதலியவைகளில் மிகவும் ஒத்து இருக்கவேண் டியவர்களேயாவார்கள். இந்த நிலையில் இருக்கவேண்டிய தம்பதித்தன்மையானது மாற்றமடைந்து அவைகட்கு நேர் எதிரிடையாய் இருக்குமாகில் மனித வாழ்வு என் பது அளவிடற்கரிய துன்பத்திற்குள்ளானதாகவே யிருக்கும். இதை உணர்ந்தேதான் சிலபெரியார்கள்,

"சற்றேனும் ஏறுமாறாய் இருப்பாளேயாகில் கூறாமல் சன்யாசம் கொள்ளு" என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தோழர் K.M. பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுதியுள்ள இந்த விவாகரத்து என்கின்ற புத்தகமானது அம்மாதிரியான சன்னியாசத்தைப் போதிப்பதாயில்லாமல் "ஏறுமாறாய் இருக்குமாகில் இணைபிரிந்துகொள்ளுங்கள்" என்றுதான் சொல்லுகின்றதே ஒழிய வேறில்லை. ஆதலால் இதை யாரும் பகுத்தறிவுகொண்டு ஆக்ஷேபிக்க முடியாது என்பதோடு எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியது என்பதே எனது அபிப்பிராயம். இப்போது உலகத்தில், இந்தியாவில் ஏதோ சில வகுப்பினர் தவிர மற்றபடி எல்லா தேசங்களிலும் விவாகரத்து முறை பெரும்பான்மையாகக் கையாளப்பட்டே வருகின்றது. ஆகையால் தோழர் K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் விவாகரத்தை வலியுறுத்தும் முறையில் அதன் அவசியத்தையும், அது அனுபவத்தில் இருப்பதையும், நமது நாட்டிலும் அனுபவத்திலில்லாத மற்ற சமூகங்களிலும் அனுபவித்துக்கொண்டு வரவேண்டும் என்பதற்காக இந்து மதம் என்பதின் ஆதாரங்கள் என்னப்படுபவைகளில் இருந்து தகுந்த ஆதாரங்களை எடுத்துக்காட்டியும், புள்ளி விவரங்களுடனும் வெளியிட்டிருக்கிறார்.

ஆகையால் இப்புத்தகமானது மிக அவசியமான ஒரு கொள்கையை வலியுறுத்துகிறதாயிருக்கின்றதென்றும், அதுபற்றிப் பொதுமக்கள் இதன் ஆசிரியரைப்பாராட்டி நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பதுடன் இதை ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துக் கொள்கை நிறைவேற உதவி புரிய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Erode,
8—8—33.

ஈ. வே. ராமசாமி.

Preface.

It is now exactly two years since this treatise on Divorce was published seriatim in the valuable columns of 'Kudi Arasu' the popular weekly of South India. Ever since that time it has been the ambition of the author to collect those articles and publish them in a book form at once handy and cheap so that all citizens, the rich and the poor alike might not only be willing but also afford to spend an hour or two over this book and understand this problem. This desire on the part of the author, though it got strengthened day by day by the appreciative reference to the treatise by some of his indulgent friends and readers, was long left unfulfilled due to more reasons than one But, thanks to the generous and timely help of my friend Mr. S. Thangavelu who has kindly undertaken to publish it, it has been possible for me to have my long-felt desire fulfilled.

But it must at once be acknowledged that the present publication has, besides its personal aspect, a public and by far the more important aspect. There can hardly be a more opportune moment for its publication in our country. The Bill on Divorce that has been moved by Sir. Hari Singh Gour in the Legislative Assembly is again coming for discussion. Hence the book has not come out a day too soon. For it is essential that

we, at least of the South should not merely agitate in the Press and on the platform for the introduction of this beneficial measure but also give a still more permanent and concrete proof of our determination to have this measure introduced at all costs. Therefore, if only this small treatise, which is intended to be the most comprehensive reply to the opponents of the Divorce Legislation in India, should succeed in not merely educating the masses but also in making converts of them to this cause, the purpose of this publication would have been more than fulfilled.

I have very great pleasure in respectfully dedicating this treatise to Dr. Sir. Hari Singh Gour than whom no Indian Ligislator has taken more pains to introduce Divorce legislation for the Hindus.

The author places on record his deep appreciation of the kindness of comrade. E. V. Ramaswamy, the celebrated Leader of the Self Respect Movement in having written a very valuable Foreward to this booklet.

My thanks are no less due to the adventurous publisher Mr. S Thangavelu of Trichinopoly.

Madras,
15—8—33.

K. M. BALASUBRAMANIAM

விவாஹ விடுதலை.

சென்ற ஓரிரண்டு வருடங்களாக 'விவாஹ ரத்து' என்னும் பேச்சு நம் இந்தியாவில் அதிலும், இந்து சமூகத்தில் அதிகமாக வழங்கி வந்துகொண்டிருக்கின்றது. புதிதாக ஒரு வழக்கத்தையோ அல்லது சட்டத்தையோ ஒரு சமூகத்திடையில் ஒருவரோ, பலரோ, நுழைக்க முயற்சிக்குங் காலையில் வழக்கமாக எவ்வளவு எதிர்ப்புகளும், விவாதங்களும், இழிவு சொற்களும் எதிர்பார்க்கக் கூடுமோ அவ்வளவு எதிர்ப்புகளும், விவாதங்களும், இழிவு சொற்களும், இந்த விவாஹ ரத்து என்னும் சீர்திருத்தத்தைக் கையாளவேண்டும் என முன் வருபவர்களும் இப்பொழுது அடைந்து வருகின்றார்கள். என்றாலும் நமது தமிழ்நாட்டில் விவாஹ ரத்து என்பது அவசியமாக வேண்டும் என்றும், அது நமது சமூகத்திற்குத் தற்காலப்போக்கின்படிக்கும் மாதர்கள் நலன், சுதந்திரம் முதலியவற்றின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்றும் சிலர் ஒரு புறம் எழுதியும், பேசியும், வரவும், மற்றொருபுறம் 'புதியன வெல்லாம் புன்மை யுடைத்து' 'மேனாட்டின் பழக்கங்கள் மிகவும் கொடியன' என்னும் கொள்கைகளையுடைய நம் நாட்டு மக்களிற் பெரும்பாலோர் இவ்விவாஹ ரத்து என்னும் விஷம் மேனாட்டிலேயே சொல்லமுடியாத ஒழுக்கக் குறைவுகளையும், இன்னல்களையும் விளைவித்து வருகின்றது போதாதென்றோ, இவ்வாறு வேலையற்ற வழக்கறிஞர்களும், வீண்வாத காம சீர்திருத்தக்காரர்களும், அந்தப் பாழும் வழக்கத்தை ஒழுக்கத்தில் தலைசிறந்த உத்தம நாடாகிய நம் நாட்டி

லும் நுழைக்கப் பார்க்கின்றார்கள் என்றும் கூக்குரலிட்டு வருகின்றனர். எனினும் 'சுயமரியாதை' என்னும் சுத்த ஒளி நம் தமிழ் நாட்டிடை சுடர்விட்டெறிந்து, பண்டய வழக்கமும், பாழும் பழக்கமும், தண்டமிழ் நாட்டிடைச் சற்றும் தங்காதபடி சுட்டு எறித்து, நம் நாட்டு மகளிர் தம்மாட்டு மேன்மை நாளும் தலைப்பட்டு நனி சிறந்தோங்கி அவர் தம் பிறப்புரிமையாகிய சுதந்திரம் என்பதை ஏனையவர் யாவரும் என்றும் மறுக்காதபடி தமக்கு அளிப்பான்வேண்டிப் பல்வேறு முறைகளை யனுசரித்து வந்தும், அவ்வாறு நம் இந்து சமூகப் பெண்மக்களுக்குச் சுதந்திரம் என்பது உண்மையாகவே அளிக்கப்படவேண்டுமானால், அச்சுதந்திரத்தில் 'விவாஹ ரத்து' என்னும் ஒரு பாகம் இன்றியமையாதது என்று நன்குணர்ந்து, அதைப்பற்றி இதற்கு முன் நடந்துவந்த பல்வேறு சுயமரியாதை (இதுபோது நடந்த விருதுநகர் மகாநாடு உள்பட) மகாநாடுகளிலெல்லாம் ஒவ்வொரு தீர்மானத்தை இயற்றிவந்தும் இருப்பதால், இப்பொழுது இந்த 'விவாஹ ரத்து' என்னும் விஷயம் விவாதம் அற்று, நம் சமூகத்தினர் அனைவரும் அதனை நன்கு சந்தேகமறத் தெளிந்து அதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியத்தினும் அவசியமாகும் எனக்கருதி இவ்வியாசத்தைத் தொடங்குவாம்.

முதலாவதாக, 'விவாஹ ரத்து' என்னும் சொற்றொடரின் பொருள் என்ன?

ஒரு கணவனும், ஒரு மனைவியும் சட்டத்தில் கண்டிருக்கும் பல காரணங்களில் ஒன்றினாலோ, பலவாலோ நீதி மன்றத்தில் தாங்கள் இனித் தம்பதிகளாய்ச் சேர்ந்திருந்து வாழ முடியாவென்றும் அதனால் தங்கள் திருமணம் என்னும் கட்டை ரத்துசெய்துவிடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள, நியாயாதிபதி காரணங்கள் இருக்கின்றனவா தகுதியானவைகளா என்றும், உண்மையாகவே இத்தம்பதிகள் இனி ஒத்திருந்து இல்லறம்

நடாத்த முடியாதா வென்றும் தக்க சான்றுகளால் நிர்ணயித்து அத்தகைய ரத்தை யளிப்பார். அதன் பின்னர் அந்த ஆண் மகனும், அந்தப் பெண்ணும், விவாஹம் என்னும் ஒரு கயிற்ருல் கட்டுண்டிருப்பதினின்றும் நீங்கி, மற்ெருரு பெண் மகளையும், மற்ெருரு ஆண் மகனையும் முறையே மீண்டும் விவாஹம் செய்துகொள்ள சட்டப்படிக்குத் தகுதியுள்ளவர் ஆவார்கள். இதுவே 'விவாஹரத்து' என்னும் சொற்ெருடரின் முக்கிய கருத்தாகும்.

இவ்விடத்திலேயே நமது வாசகர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமாகும். அது என்னவெனின் அவர்கள் இப்பொழுது மற்ற சமூகத்தாரோடு இந்து சமூகத்தினருக்கும் வழங்கப்பட்டுவரும் (Judicial Separation) 'சட்ட விலக்கு' என்பதையும், நாம் இப்பொழுது பேசப்புகும் 'Divorce' 'விவாஹ ரத்து' என்பதையும், ஒன்றுக்கொன்று கலந்து விடக்கூடாது என்பதே.

'சட்ட விலக்கு' என்பது விவாஹம் செய்துகொண்ட இரு தம்பதிகளும் ஒரேயிடத்தில் இனிமேல் கணவன் மனைவி என்னும் நிலைமையில் இருக்கக்கூடாது என்பதேயாகும். இதில் சட்டப்படிக்குக் கணவன் மனைவிக்கு மாதாந்திரப் பணமும் கொடுக்கும்படியும் தீர்மானிக்கலாம். மேலும் சட்டத்தால் விலக்கப்பட்ட தம்பதிகள் மறுமுறை விவாகம் செய்துகொள்ள சட்டப்படிக்கு அருகர்கள் ஆகமாட்டார்கள். ஆனல் 'விவகாரத்து' செய்துகொண்ட தம்பதிகளோ வெனின், அதன் பின்னர் தம்மிருவருக்கும் எவ்விதமான சம்பந்தமும் அற்று இருப்பதன்னியில், இஷ்டப்பட்டால் மீண்டும் வேறு கல்யாணம் செய்து கொள்ளவும் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

'விவாகரத்து' என்னும் விஷயம் முக்கியமாகப் பெண் சுதந்திரத்தை ஒட்டியதென்றும், அது மகளிர் சுதந்திரத்துக்கு இன்றியமையாததென்றும் முன்னமே நாம் கூறினேம். அதிலும் நம் இந்து சமூகத்தில் உள்ள

விவாக முறைமைப்படி இந்த 'விவகாரத்து' இந்து மனைவியர்களுக்கு அவசியத்திலும் அவசியம் ஆகும். ஏனெனில் ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு 'இந்து' புருடன் ஒரு 'இந்து' மனைவியைத் திருமணம் செய்து கொள்கிறுன் என்று வைத்துக்கொள்வோம். சில நாட்கள் கழிந்தபின் ஏதோ ஒரு நியாயமுள்ள காரணத்தாலோ அல்லது நியாயமற்ற காரணத்தாலோ, அவன் தன் மனைவியுடன் ஒத்துவாழ முடியாதெனத் திண்ணமாக முடிவுக்கு வந்துவிடுகிறுன். பின் அவன் வழக்கமாக என் செய்கிறுன்? நியாயஸ்தலத்தைச் சற்றும் நினைப்பதும் கூட இல்லை. அல்லது நியாயஸ்தலங்களுக்குப் பதிலாக விருந்து நீதி என்பதைப் புகட்டியும் அறிவுறுத்தியும் வரும் சமூகக் கட்டுப்பாட்டையோ அல்லது அபிப்பிராயத்தையோ அவன் சிறிதும் நாடுவது மில்லை. மற்றொரு பெண்ணை அனைத்துலகும் அறிய மறுமணம் புரிந்து கொள்கின்றுன். வழக்கம்போல் தனது இரண்டாம் மனைவியாகிய இஷ்ட கன்னியுடன் இன்பவாழ்வு வாழ்கின்றுன். ஆனுல் அவனது முதல் மனைவியின் நிலைமையென்ன? அது எவ்வாறு என்பதை ஒழுக்கமும் உயர்வும் அறிவும் அன்பும் முதிர்ந்தோங்கி நிற்கும் நம் இந்து சமூகம் சிறிதேனும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. அவ்வாறு உணர்ந்தாலும் தெரியாதது போல் இருந்து விடுகின்றது. அல்லது 'அவன் தலைவிதி யவ்வாறு இருக்கின்றது' என்றும் 'அவள் வாங்கி வந்த வரம்' என்றும் பல்லுதிர்ந்த கிழவியர் போல் பலப்பட பாடித் தன் சுயநலக் காரியங்களைச் செய்யப்போந்து விடுகின்றது. ஆனுல் அந்தோ! அம்முதல் மனைவியாகிய இளமையும் எழிலும் மிக்க அக்கன்னிகையின் பாடு என்னவாயிற்று? அவளுக்கு இரண்டே இரண்டு இடங்கள் உண்டு; ஆனுல் அவள் எந்த இடத்தில் இருந்த போதிலும் 'சுகம்' என்பது மட்டும் இல்லை. ஒன்றே தனது 'கணவன்' என்று சமூகம் தன்னைக்காட்டிக் கொடுத்தக்

கருணையற்ற கருப்புலியின் சீற்றம், உதை, வசவுமொழி முதலியனவற்றைத் ‘தலைவிதி’ ‘தலைவிதி’ என்னும் ஒரேயொரு மந்திரத்தை மட்டும் முணுமுணுத்துக் கொண்டே ஏற்றுக் கொண்டும், தனது சகக்கிழத்தி தன் கணவனுடன் உல்லாசமாகச் சல்லாபஞ்செய்து ஒய்யாரமாக உண்டு உடுத்தி பல்வேறு லீலைகள் செய்து சுகம் அனுபவிக்க, அதையும் தன் கண்களால் கண்டு தண்ணீர் ததும்பித் தாரையாய் ஓட மனம் புண்ணாகித் தினமும் தடுமாறித்தன் மாற்றாள் ஏவும் சிறு தொழில் புரிந்து, அன்னவள் வெறுப்பால் வீசியிடும் விரைச்சோற்றை விழுங்கி வெந்து நொந்து வாடித்திரியும் வீண் வாழ்வினள் ஆவாள். மற்றொரு வழியாவது, இக்கொடியன் அகத்தினின்றும் அறவேயகன்று தன் பிறப்பிடம் போந்து, அங்கண் உணவு, உடை முதலியன தன் தந்தை எவ்வளவு உபசாரத்துடன் அளித்த போதிலும், ஒரு இளம் பெண் இயற்கையாக விரும்பும் கணவனுடன் வாழும் இன்பவாழ்வு என்பதை அனுபவிக்க ஒரு வழியும் அற்றவளாய் தன் சகோதரன் முதலியவர்கள் தன் கண் முன்பாகவே தத்தம் மனைவியரோடு வாழ்வதைக் கண்டும்; மற்றும் தன்னைப்போன்ற பெண்கள் அயல் வீடுகளில் தத்தம் கணவர்களோடு கூடி வாழ்வதை நோக்கியும் மனம் புழுங்கிச் சொல்லொணாத்துயர் அனுபவிப்பதுமாகும். இவ்வாறு இருதலைக்கொள்ளி எறும்பு போல் பரிதவிக்கும் இப்பெண், தன்னால் இயன்றவரை பொறுத்துப் பார்த்தும் தன் கணவன், பெற்றோர் சமூகம் ஆகிய அனைவரும் தன்னை இவ்வாறு கைவிட்டு மிருகத்திலும் கீழாக நடத்துவதைக் கண்டும், தனது கற்பையும் இழந்து விடுவாளானால், அவளை சிரிதள வேணும் நியாயம், கருணை என்பது தன்னகத்தே கொண்ட மனிதன் குற்றங்கூறுதல் இயலுமோ?

இவ்வாறு நம் இந்து சமூகத்தில் ஆணுக்கு ஒரு சட்டமும், ஆணுக்கு ஒரு நீதியும், பெண்ணுக்கு மற்றொரு சட்டமும் நீதியுமாக யிருத்தலை யொழிப்பான்

வேண்டியே இப்பொழுது இந்து ஆண் மகனுக்கு எவ்வாறு முதல் மனைவியிருக்க அந்த விவாஹத்தையும்கூட ரத்து செய்து கொள்ளாமலும், அந்த முதல் மனைவியின் சுகத்தையும், நன்மையையும் கவனியாமலும், அதற்கேற்ற காரணம் இருந்தும், இல்லாமலும், மற்றொரு பெண்ணை மணம் செய்து கொள்ளும் சுதந்திரம் இருக்கின்றதோ, அதே சுதந்திரம் இந்து பெண் மக்களுக்கும் வேண்டும் என்று நாம் கேட்கிறோம். நாம் 'விவாஹரத்து' மூலம் இந்து பெண்களுக்குக் கேட்கும் மறுமணச் சுதந்திரம் இப்பொழுது ஆண்மகன் அனுபவிக்கும் சுதந்திரத்தைக் காட்டிலும் பலவிதத்திலும் சிறந்தது என்பதற்குச் சந்தேகமே இல்லை. நமது உண்மையான கடமையிப்பொழுது என்னவென்றால் ஒன்று (இப்பொழுது பெண்மக்கள் இருப்பது போல்) ஆண் மக்கள் யாதொரு காரணத்தாலும் தன் மனைவி உயிருடன் இருந்தாலும் அல்லது இறந்தாலும் மற்றொரு மணம் செய்து கொள்ளவே கூடாது. அல்லது இப்போது எப்படி ஆண்மக்கள் தங்கள் இஷ்டப்படி வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் சுதந்திரம் உடையவர்களாய் இருக்கிறார்களோ அதே மாதிரி நம் பெண் மக்களும் தம் இஷ்டப்படி மறுமணம் பண்ணிக்கொள்ளும் சுதந்திரம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். இவ்விரண்டு விதங்களில் ஒன்றும் இல்லாமல் (இப்போது இருப்பது போல) கணவன் மட்டும் எண்ணிறந்த கலியாணங்கள் தன் முதன் மனைவி இருந்த போதிலும், இறந்தபோதிலும் பண்ணிக்கொள்ளும் தகுதியோடிருக்க, அதே விதமான தகுதியும், சுதந்திரமும் பெண்களுக்குத் தம் கணவன் இருந்தபோதிலும், இறந்தபோதிலும் மறுமணம் செய்துகொள்ள இல்லாமலிருப்பது (குறைவாகக் கூறுமிடத்து) அநாகரீகமற்ற அநியாயமான கொடூரமான மனிதன் கொடுங்கோன்மையேயன்றி வேறல்ல.

இவ்வாறு பல்வேறுபட்ட மனிதனின் கொடுங்கோன்மையை வெட்டி வீழ்த்தியறவே யொழிப்பான் எண்ணியே உலகத்திலுள்ள மாதர்கள் அனைவரும் பெருமுயற்சி செய்துகொண்டு வந்திருக்கின்றனர். இன்னும் நாளும் செய்து வருகிறார்கள். இத்தகையை பெண்களின் விடுதலை இயக்கத்தில் நம் நாட்டு மாதர்களும் கலந்து கொள்வதன்றி முன்னணியில் நின்று தமது பிறப்புரிமையாகிய பூர்ண சுதந்திரத்தைதம்மை இதுவரை சட்டங்களின் மூலமும் சமூகத்தின் மூலமும் நலிவுறுத்தி நசுக்கிவந்த ஆண் மக்களிடம் கேட்குங்கால் யோக்கியமான எந்த ஆண்மகனாவது அதை மறுக்கமுன் வருதல் ஒக்குமா? 'ஐயோ! இவ்வாறு இம்மாதர்களுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டால் மதம் போய்விடுமே! மானம் அழிந்துவிடுமே! ஒழுக்கம் ஓடிவிடுமே! சமூகம் சீர்குலைந்து அல்லோல கல்லோலபட்டு அழிவு அடைந்துவிடுமே! அதனால் நம்நாடு தன் பழம் பெருமையையும் உயர்வையும் இழந்து விடுமே!' என்று பொய்ப் புலம்பல் அழுது புன்கண்ணீர் பெருக்கும் ஆண் மக்களுக்கு பெண்கள் நிச்சயமாய் இறுக்கும் விடை என்னவென்றால் 'இந்தியநாடு தன் பிறப்புரிமையாகிய சுதந்திரத்தைவேண்டும்போது ஆங்கிலேயர்கள் (ஐயோ உங்களுக்குச்சுதந்திரம் கொடுப்போமாகில் உமது தேசத்தின் நலம் அழிந்து அமைதி யொழிந்து நாசம் மிகுந்து மோசம் விளையுமே) என்று புலம்பும்போது இந்திய மக்கள் அவ்வாங்கிலேயர்களுக்கு என்ன பதில் அளிப்பார்களோ அதுவேதான். அந்த விடையாவது; 'சுதந்திரம் என்பது நமது பிறப்புரிமை. அதை ஒருவரும் மறுப்பதற்கில்லை. ஒரு நாட்டினரை மற்றொரு நாட்டினர் ஆளுவதற்கு அருகரும் அல்லர். அது நீதியுமல்ல. அன்னிய ஆட்சியிலும் எங்களின் ஆபாச ஆட்சியே சிறந்தது' அதுபோன்று இந்தியப்பெண்களும் கூறுவதாவது; 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் வழக்கப்படி ஆதிநாள் தொட்டு உலகத்தில் சஞ்ச

ரிக்கும் மானிடருள்சரிபாதியான தொகையுள்ள எங்களை நசுக்கி நலிவுருத்தி ஆண்களுக்கு ஒரு நீதியும் ஒழுக்கமும்பெண்களுக்கு ஒரு நீதியும், சட்டமும் ஆக்கி எங்களை 'ஒழுக்கம்' 'மதம்' என்னும் பேர்களால் பயமுறுத்தி ஆண்டு வந்ததுபோதும். ஆண் மக்களாகிய உங்களுக்கு உலகத்தில் ஒழுக்கத்தையும் நன்மையையும் காப்பாற்றவும் பெருக்கவும் எவ்வளவு பொருப்பும் வன்மையும் உண்டோ அவ்வளவு பொருப்பும் பலனும் உங்களது தொகையைக்காட்டிலும் குறையாத பெண் மக்களாகிய எங்களுக்கும் நிச்சயமாகவுண்டு. ஆகவே ஆண் மக்களையும் பெண் மக்களையும் சரிசமமாகப் பாதிக்கும் "விவாஹம்" என்னும் விஷயத்திலும், அந்த விவாஹம் என்னும் ஒருமுறை ஒழுங்காகவும், கட்டுப்பாட்டுடன் இருப்பதற்காக மனிதன் கண்டு பிடித்த ஒழுக்கமுறை 'கற்பு' முதலியனவற்றிலும் நாங்கள் உங்களைப்போலவே ஈடுபட்டிருக்கிறோம். ஆகையால் நீங்கள் மட்டும் 'மாமியாள் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்" என்றபடி இஷ்டம்போல் நடந்து கொள்ளத் தகுதியான சட்டங்களையும் முறைகளையும் தயாரித்து வைத்துக்கொண்டு, நாங்கள் மட்டும் இந்த விவாஹம் என்னும் உங்களது சூழ்ச்சி வலைக்குட்பட்டதுமன்றி அதினின்றும் இடையூறுகள் வந்தகாலைத்தப்பி யோடுவதற்கும் வழியில்லாமல் கிடப்பது மிகவும் மடைமையும் கொடுமையும் உடையதாகும். ஆதலால் எங்களுக்கும் நீங்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தையும் கொடுத்து விடுங்கள்."

இத்தகைய விடை நாம் மட்டும் பெண்மக்களின் சார்பாககூறுவதன்று, எந்தப் பெண்மக்களை விவாஹமும் அதற்கின்றியமையாததாகிய சுதந்திரமும், பாதிக்குமோ, அந்தப்பெண்மக்களே நமது இந்தியாவில் இதுவரைப்பல்வேறு மகாநாடுகளிற் கூடி பெண்கள் சமூகத்திற்கு விவாஹ விடுதலை மசோதா இன்றியமையாதது எனத்தீர்மானித்துள்ளார்கள், ஐக்கிய மாகாணத்தைச்

சார்ந்த காசியில் கூடிய கூட்டமும் இன்னும் ஏறக் குறைய ஒவ்வொரு மாகாணத்திலும் கூடிய பெண்கள் கூட்டமும் விவாஹரத்து வேண்டுமென்றேதான் கூறி வந்துள்ளது. இவற்றில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண் டியது கடந்த ஆண்டில் சென்னையிற் கூடிய மாகாண மாதர் மகாநாடும் அதில் திருமதி பட்டவர்த்தன அம் மாள் அவர்கள் பிரேரேபித்து பல எதிர்ப்புகளினி டையே நிறைவேற்றப்பட்ட தீர்மானமுமேயாகும். அது கூறியதாவது:—'இம் மகா நாடு இப்பொழுது நம் சமூகத் தில் வழங்கிவரும் ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறு என்றிருக்கும் இருவகைச் சட்டத்தையும் ஒழுக் கத்தையும் முழுதும் கண்டிப்பதுடன் ஆண்கள் பெண் கள் இரு பாலார்க்கும் விவாஹரத்து செய்துகொள்ளச் சம உரிமை தரப்படவேண்டும்.'

இதுபோன்றதொரு தீர்மானம் நம் சமூகத்தில் வீழுந்ததொரு வெடிகுண்டுக்குச் சமமாயிற்று. இது நம் தமிழ் நாட்டை ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது. பெரியவர், சிறியவர், பணக்காரர், ஏழை, பார்ப்பனர், பார்ப்பனரல் லாதவர், ஹிந்து, ஹிந்துவல்லாதவர் ஆகிய பலதரப் பட்ட மக்களும் தங்களுக்குள் இயல்பாகவேயுள்ள பல் வேறுபட்ட வேற்றுமைகளையும் பேதங்களையும் மறந்து இதில் மட்டும் ஒருமனப்பட்டு இந்தத் தீர்மானத்தையும் இதை நிறைவேற்றியதற்குக் கருவியாயிருந்த பெண் மணிகளையும் கண்டித்து நொந்தனர். இன்னும் மிக்க ஆச்சரியகரமான ஒரு விசேஷம் இதில் என்னவென்றால் நாள்தோறும் தம்முள் சச்சரவிட்டு வேறுபடும் நாலா விதமான பல பத்திரிகைகளும் (ஹிந்து, ஜஸ்டிஸ், மெ யில் முதலியவைகளும்) தம் வாழ்நாளில் ஒருமுறை ஒரு மனப்பட்டு 'ஒழுக்கத்தைக் குலைக்க வந்ததும் ஊரைக் கெடுக்க வந்ததும்' ஆகும் இத்தீர்மானம் என ஏகோ பித்துக் கண்டித்தன. எஞ்சி நின்ற தமிழ் பத்திரிகை கள் தம் வழக்கம்போல் ஒத்துக்கு மத்தளம் போட்டு

ஊளையிட்டு ஓய்ந்தன. இவ்விதமான ஒரு காக்ஷி ஒரு பெறும் அறிகுறியையுடையதாகும். என்னவென்றால் (தமது கணவர்களின் ஆணைக்குட்பட்டு இத்தீர்மானத்துக்கு மறுப்பு எழுதிய ஓரிரண்டு பெண்மக்கள் தவிர) இந்தத் தீர்மானத்தை யறவே கண்டித்தவர்கள் அனைவரும் ஆண்மக்களே. இதைச்சற்று நிதானித்துக் கவனிப்பின் மனித வியற்கை தேசத்தைப்பொறுத்தும் ஜாதி, மதம், அல்லது பால் இவைகளைப் பொறுத்தும் ஒரேமாதிரியானது என்பது நன்கு விளங்கும். தற்காலத்தில் இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும் இருந்துவரும் தொடர்பைச்சற்று நோக்குங்கள். ஆங்கிலேயர்கள் தங்களுக்குள் எத்தனை கக்ஷி பேதங்களும் சண்டை சச்சரவுகளும் இருந்தபோதிலும் (உண்மையான ஒரு சிலரைத் தவிர) அவர்கள் அனைவரும், தம் அடிமை தேசங்களுள் எவையேனும் தலையெடுக்க முயன்று தன் சுதந்திரத்தை கேட்குமேல் எவ்வாறு ஒன்று சேர்ந்து அது தமது பொதுவான ஆதிக்கத்தைப் பாதிக்காமல் இருக்குமாறு கண்டிக்கவும் அதை எதிர்க்கவும் முன் வருகின்றார்களோ அவ்வாறே இப்பொழுது ஆண்மக்கள் அனைவரும் பெண்பாலார் சுதந்திரம் பெற்றுவிடின் தமது ஆதிக்கமும் அதிகாரமும் போய்விடுமே யென்றஞ்சி ஒன்று சேர்ந்து எதிர்க்க முன் வந்துள்ளார்கள். இத்தகைய நடத்தை ஆண்மக்களது அதிகாரக் காமத்தையும் அவர்களது தற்காப்புத் தந்திரத்தையும் அன்றி மற்றெதைக்காட்டுகின்றது? ஒருக்காலும் அது ஆண்மக்களுக்கு ஒழுக்கத்தின் பாற்பட்ட பிரிவு என்பதைக் காட்டவே காட்டாது.

'பெண்கள் எப்போதும் இதுவரையில் ஆண்களின் பாதுகாப்பிலும் போஷகத்திலும் இருந்து வந்தவர்கள். அவர்களுக்கு அறிவும் அனுபவமும் ஒழுக்கத்தைக் காப்பாற்றும் முறையும் தெரியாது. ஆகையால் நாங்கள் அவர்கள் தம்மையறியாமலே முறைதப்பி விவாஹ விடுதலை வேண்டும் என விரும்புதலைத் "தடை செய்கின்

ரோம்" என்று சிலர் கூற முன் வரலாம். அவ்வாறும் வந்துள்ளார்கள். ஆனால் இதற்கு இரண்டு மறுப்புகள் உண்டு முதலாவதாக எந்த ஆண்மகனாவது நம்தேசத்திலிருக்கும் பெண்பாலர் அவ்வளவு பேரும் ஒழுக்க உணர்ச்சியும் ஒழுக்க முறையும் அற்றவர்கள் என்று கூற முன்வர முடியுமா? வென்று கேட்கின்றோம் ஒரு காலும் முடியாது. ஏனெனின் இதுவரைக்கும் இந்த உலகத்திலேயோ அல்லது நம் நாட்டிலோ 'ஒழுக்கம்' என்பது ஒன்று தலைகாட்டிக்கொண்டு வந்திருக்குமானால் அது பெண்மக்களாலும் அவர்கள் தம் உயர்வும் உண்மையும் தாங்கிய வாழ்வினாலும் என்பதை அறிவு, அனுபவம், இம்மியும் கொண்டுள்ள எவனும் மறுக்கவே முடியாது. அது ஒருபுறமிருக்க, அப்படியே நம் பெண்மக்கள் ஒழுக்க உணர்ச்சியற்றவர்களாய் இருப்பதாக வைத்துக்கொண்டு பேசுவோம். அதிலிருந்து என்ன பெறக்கிடக்கின்றது? பல்லாயிரம் ஆண்டுகளாக ஆண் மக்கள் [ஒழுக்க வுயர்விலும் உணர்ச்சியிலும் தலை சிறந்தவர்கள் என்று தம்மைத் தாமே புகழ்ந்துகொள்ளும் ஆண் மக்கள்] தங்களது ஆதரவின் கீழும், ஆட்சியின் கீழும் பெண் மக்கள் அத்துணைபேரையும் அடக்கிவந்ததுமன்றி நல்வழியில் பழக்கியும் வந்துள்ளோம் என்றும் கூறிக்கொள்ளுவார்கள். அப்படி அவர்கள் கூறுவது மிகவும் உண்மையே. ஆனால் நாம் கேட்பது என்னவென்றால் இவ்வளவு காலம் இத்தகைய வொழுக்கத்திற் குறையுளாம் ஆண்கள்பாற் பழகிய பெண்கள் இன்னும் [ஆண் மக்களே சொல்வதைப்போல்] ஒழுக்க வுணர்ச்சி பெற வில்லையென்றால் இதற்குக் காரணம் என்னவாயிருக்கக் கூடும்? 'கடவுள்' இவர்களை இயற்கையிலேயே இவ்வுணர்ச்சி யில்லாமற் படைத்திருக்கலாம் என்று ஒருவரும் [ஆண் மக்கள்] கூட கூற முன் வரமாட்டார்கள் என்பது திண்ணம். பின் என்னவாயிருக்கும்? அது என்னவென்றால், ஆதிக்கமும், ஆட்சியும் செலுத்தி வந்துகொண்டிருந்த ஆண்பாலரிடமே அவ்வொழுக்கம், என்னும்

பண்டம் இல்லாமல் இருந்ததேயாகும். 'அரசன் எப்ப டியோ குடிகள் அப்படி' 'ஆண்கள் எப்படியோ பெண் கள் அப்படி' பெண்கள் ஒழுக்கம் அற்றிருப்பின் ஆண் களும் அவ்வாறே. ஆகையால் பெண்களைக் காட்டிலும் ஆண்களுக்கு அதிக ஒழுக்கம் இல்லையென்பது அவர் வாய்ப்பட்டே பெறப்பட்டது. அப்படியானல் அவர்கள் [ஆண்கள்] ஒழுக்கத்தில் அளவு கடந்த நட்புப் பாராட்டு தல் அயோக்கியத்தனமும், போலித்தனமுமேயன்றி வேறல்ல.

இன்னும் சிலர் என்ன கூறுகின்றூர்கள் என்ருல் 'ஏதோ ஒரு சில ஆங்கிலங் கற்றவர்களும் எவ்விதத் திலும் தமது தேசப் பெண்மக்களது உண்மை யபிப் பிராயங்களையும், தேவைகளையும் நன்குணராதவர்களும் ஆகிய பெண்டிர்கள் கூடி தம் இஷ்டப்படி விவாஹரத்து வேண்டும் என வீண் வார்த்தையாடுகின்றனர்' நாம் இதை ஒப்புக்கொள்வதற்கு முன்னர் இவர்களை இரண்டு கேள்விகள் கேட்க அவாவுகின்ரேும். முதலாவதாக இவர்கள்கூட, இதே ஆங்கிலம் படித்த சிறு தொகை யினராகிய பெண் மக்கள் 'பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும், பெண்களுக்கும் ஆண்களைப்போல சமபாகம் தந்தை முதலியவர் பொருளில் பெறும் உரிமை வேண் டும்' என இதுபோன்ற தீர்மானங்கள் கொண்டுவந்தால் அதை முழு மனதோடு ஒப்புக்கொள்வதுடன் இவ்வாறு இப்பெண் தலைவிகள் தம்பாலாரைக் காக்க முன் வருவ தற்காகப் பாராட்டவும் செய்கின்றனர். ஆனல் இதே பெண்தலைவிகள் பெண்களுக்கு விவாஹ விடுதலை வேண் டுமென்ருல் 'வந்தது விபத்து. இப்பெண்கள் தேச மாதர்களின் உண்மையபிப்பிராயத்தை எவ்வாறு கண்டு கொண்டனர். இவர்கள் செய்வது தவறு. மற்ற மாதர் கள் இவர்கள் கூறுவதை யொப்புக்கொள்ளார்கள்' என மறுக்கின்றனர். நண்பர்களே! சற்று யோசியுங்கள். இத்தகைய மக்கள் சிறிதேனும் கூற்றுப் பொருத்தம்

என்பது உடையவர்கள் ஆனல் ஒரு விஷயத்தைப்பற்றி தம் தேசப் பெண் மக்கள் சார்பால் பேச உரிமை யுடைய தலைவிகள் மற்ற விஷயங்களைப் பற்றியும் பேச அவர்களுக்கு அதே. வுரிமையுண்டு என்பதை ஒப்புக் கொண்டேதான் தீரவேண்டும். நம் நாட்டிலுள்ள ஒவ் வொரு பெண்ணையும் சென்று இதைப்பற்றியவர்கள் அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரியும்வரை நாம் ஒன் றும் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனல் அது மிகவும் முடியாத காரியம். அவ்வாறு அது செய்யும்வரை அப் பெண்கள் தலைவிகளின் அபிப்பிராயத்தை நாம் ஒப்புக் கொண்டேதான் ஆகவேண்டும். இரண்டாவதாக, 'இந் தியாவிற்குச் சுயராஜியம் தேவை' என ஆங்கிலங் கற்ற சில இந்தியர் வேண்டும்போது 'இவர்கள் ஊமையான கோடான கோடி இந்தியர்களின் பிரதி நிதிகள் அல்லவே யல்ல; இவர்கள் அவர்கள் சார்பாகப் பேச உரிமையில் லாதவர். ஏனெனின் அவர்கள் சுயராஜியம் ஒருக்காலும் வேண்டிலர்' என்று ஒடையர் முதலியோர் சொல்லின் அதில் உண்மை யுண்டா? இல்லை. அப்படியில்லையானல் அதே ஒடையர் கூற்றைச் சற்று மாற்றிக் கூறும் இம் மக்களின் வார்த்தையில் என்ன வளம் இருக்கின்றது? என்ன வாய்மை கிடக்கின்றது? போலிவாய்மையும், சுயநலப் புன்மையுமன்றி வேறென்றுமில்லை.

இதுவரை நாம் கூறிவந்தவைகளேயன்றி நம் சமூ கத்திற்கு விவாஹ விடுதலையென்பது இன்றியமையாதது என்பதற்கும் அது இல்லாத காரணத்தால் நம் பெண் மக்கள் எவ்வளவு தூரம் கஷ்டப்படுகின்றனர் என்பதற் கும் உதாரணமாக சுமார் இரண்டு ஆண்டுகளுக்குமுன் திரு. காந்தியடிகளுக்கும், ஒரு நிரூபருக்கும் 'யௌவன இந்தியா' என்னும் பத்திரிகைமூலம் நடந்த ஒரு நிகழ்ச் சியைப்பற்றி இங்கு கவனித்தல் அவசியம் என்று கருது கின்றோம். அந்நிருபர் பின்வரும் கருத்தையமைத்து காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் எழுதுகிருர். 'எனது

தங்கையின் கணவன் இப்பொழுது குடி முதலிய தீத் தொழில்புரிந்து வருவதுமன்றித் தன் மனைவியை அளப் பருந்துன்பங்கட்கு ஆளாக்கி வருகின்றான். அவளை ஒவ்வொரு நாளும், நிமிடமும் வருத்தியும், அடித்தும் வருவதிலே தான் ஒரு மிருகத்தனமான சந்தோஷமும் திருப்தியும் அடைந்து வருகிறான். அவளை ஒரு பெருந் தூணிற்கட்டிவைத்து அவள் நாணவும், வெட்கவும், அவள் மனம் வெந்து புழுங்கவும் அவளது கண்கள் முன் னரே செய்யத்தகாதனவும், அருவருப்பூட்டுவனவும் ஆ கும் செயல்களைச்செய்ய வருகிறான். ஆக என் தங்கை இக்கொடும்பாதகனிடம் படும்பாடு சொல்லத்தரமான தன்று; இத்தன்மையாகத் தம் கணவரிடம் தப்பியோட வழியின்றி துன்பத்திற்குப் பெண்களையாளாக்கும் இவ் விந்துமதம் இருந்தென்ன? போயென்ன? திக்கற்றுத் தவிக்கும் என் தங்கைக்கு உய்வழியொன்றுரைப்பீர்க ளாக.'

இந்தக்கொடூரமான செய்தி கல் மனதைப்பிளந்து கசியவைக்கும்மாற்றது. ஆனால் இதற்குத் திரு. காந்தி யடிகள் தன் வழக்கம்போலப்பின் வருமாறு பதிலுறைத் தார். அறிவிலிகள் தாம் இந்துமதம் இவ்விதக் குறை களுக்கும், கொடுமைகளுக்கும் காரணம் எனக்கூற முன் வருவார்கள். உலகத்திலுள்ள எல்லாமதங்களும் இத் தகைய நிலைமைக்கு இந்துமதத்தைப்போலவே இடங் கொடுக்கின்றன வென்பதையிவர்கள் உணர்வதில்லைபோ லும், இவ்வாறு துன்புறும் மனைவியர் நம் சமூகத்தில் பத்தாயிரம் லக்ஷத்திற்கு ஒருவராக இருப்பதும் அரிது. ஒவ்வொரு மனைவியரும் அவரது இல்லத்திற்கு ஒரு அர சிபோல் விளங்குகின்றார். ஆகவே இத்தகைய தீமைக ளைத்தடுக்க வேண்டுமானால் சமூகக்கட்டுப்பாட்டாலும், உலக அபிப்பிராயத்தின் மூலமுமேதான் முயற்சிக்க வேண்டும். சட்ட மூலம் இதில் தலையிடுவது தவறு. இந்தப்பெண்ணைப்பொறுத்தமட்டில் நான் அவளை உல

கத்தைத்துறந்து தனியாக வாழ்ந்து சமூகத்தொண்டும், தேசத்தொண்டும் ஆற்றுமாறு கேட்டுக்கொள்ளுவேன்.

பசிக்குணவு என்று ஏந்தியகையில் பாராங்கல்லை வழங்கியதுபோல், உய்வழி உரைப்பீர் என்று கேட்டவனுக்குக் காந்தியளித்த மெய்வழியின் தன்மை என்னே! ஆனால் காந்தியையறிந்த ஒவ்வொருவருக்கும் இவ்வித விடை எதிர்பாராததன்று. அறுத்தாலன்றி குணமடைய வொண்ணாத புண்ணுக்கு ஆமணக்கெண்ணைகொண்டு சிகிச்சை செய்வேன் என்னும், மருத்துவன்பால் சென்றவர் அடையும் பலன் வேறென்ன? இளம்பெண் ஒருவள், எழிலுடையாள்; இன்பவாழ்வில் சலிக்காத நாட்டம் இன்னும் உடையாள். இவர் உலகைத்துறந்து தேசத்தொண்டு செய்யவேண்டுமாம். காந்தியடிகளின் புத்திமதியின் சிறப்பிருந்தவாறென்ன! இத்தகைய பதில் சாந்தகுண சீலசத்யமிகுசன்மார்க்க வாழ்விற்கு ஒவ்வியதாகவிருக்கலாம். ஆனால் அது எம்போன்ற இளைஞர்களுக்கு அதிலும் இளம் பெண்மக்களுக்கு எவ்வாறு பொருந்தும் என்று காந்தியவர்கள் உணராது போனதற்கு நாம் மிகவும் வருந்துகிறோம். அறுபது ஆண்டுகட்குமேலாக தினந்தோறும் தன் மனத்தில் நிகழும் சச்சரவுகளையும், சந்தோஷங்களையும் கடந்து அதனாற் பெறும் அறிவு, அனுபவம் என்பவற்றால் தூய வாழ்வு வாழ உணர்ந்துகொண்ட திரு. காந்தியடிகள் சாதாரண மக்களுக்கு சந்நியாசமும், சமூகத்தொண்டும் போதித்தல் 'அறஞ்செய விரும்பு' என்பதற்கு எழுத்துக்கூட்டுபவனை யாப்பிலக்கணத்திற்குப் பொருள் கூறச் சொல்லுவது போன்றதாகும். ஆகவே இத்தகைய மக்கட்கு ஒரே ஒரு உய்வழியுண்டு. அதுதான் 'விவாஹ ரத்து' இதே அபிப்பிராயத்தை லாகூர் பீப்பிள்' என்னும் பத்திரிகையும் முன்பு நம் நாட்டில் வந்துகொண்டிருந்த 'ரிவோல்ட்' பத்திரிகையும் கொண்டன.

இனி இது ஒருபுறமிருக்க காந்தியடிகள் கூறியுள்ள மொழிகளில் சாதாரணமாக 'விவாஹரத்தை' எதிர்க்கும் மக்கள் வழக்கமாகக்கூறும் சில காரணங்கள் இருத்தலால் அவைகளைச் சற்று ஆராய்ந்து அவைகளில் எவ்வளவு உண்மைகள் கிடக்கின்றனவென்று நோக்குவோம்.

முதலாவது திரு. காந்தியவர்கள் 'இந்து மதத்தில் மட்டுமேயன்றி உலகிலுள்ள ஏனைய மதங்களிலும் இத்தகைய கொடுமைகள் நடப்பதற்கு இடமுண்டு' என்று கூறுவதை யொப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் நாம் மிகவும் வணக்கத்துடன் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால் மற்ற மதத்தினருக்கும், நம் மதத்தினருக்கும் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. அதாவது இவ்வாறு தம் மதத்தில் இத்தீமைகள் விளைய இடமுண்டு என்பதையவர்கள் நன்குணர்ந்துதான் அவர்கள் அத்தீமைகளினின்றும் தப்பியோட ஒருவழி (Safety Valve) கண்டுபிடித்துள்ளார்கள். அதுதான் 'விவாக விடுதலைச்சட்டம்' என்பது. நாமோவெனில் இத்தகைய தீமை நம் சமூகத்தில் இருப்பதை நன்குணர்ந்தபோதிலுங்கூட தீக்கோழியைப்போல் நம் கண்ணை மூடிக்கொண்டோ அல்லது மற்ற மதங்களில் இருப்பதால் நம்மிடத்தும் அது இருக்கட்டும் என்றோ போலித்தனமாகப்பேசி வருகின்றோம். உலகத்திலுள்ள மதங்கள் எல்லாவற்றிலும் ஏறக்குறைய நம் இந்துமதம், ரோமன் கத்தோலியமதம் இரண்டைத்தவிர மற்றவைகள் எல்லாம் விவாகரத்தை யனுமதிக்கின்றன. அதுமட்டுமல்ல, இந்துக்களுக்குள்ளேயே ஒரு பிரிவினருமாகிய பிரம்ம சமாஜத்தினரும் அதைக் கையாண்டுவருகின்றனர். இவ்வாறு இருப்பினும் நாம் அக்குறையைத் தைரியமாகத் தீர்த்துக்கொள்ளாமல் இருப்பதற்காகவே நம் இந்து மதத்தை, காந்தியவர்கள் அதை விரும்பாவிடினும் குறை கூறவேண்டியதாயிருக்கின்றது.

இரண்டாவது "இத்தகைய தீமையை யனுபவிக்கும் பெண்களின் தொகை மிகக்குறைவு. ஆகையால் இதற்கு அடிப்படையான, தீவிரமான பரிகாரம் வேண்டிய தில்லை" என்கின்றார் காந்தி. இது மிகவும் உண்மையை யுடையதுபோலத் தோன்றினும் சற்று உற்றுநோக்கின் இதன் பொய்மை வெளியாகும். பொதுவாக நமது வாசகர்களையே இதைப்பற்றி யோசிக்க வேண்டுகின் றோம். நமது இந்திய தேசத்தை யெடுத்துக்கொண்டால் இக்கொடுமைகள் குறைந்த தொகையனவா அல்லது மிகுந்தனவா? என்று காண இரண்டு வழிகள் உண்டு. ஒன்று பத்திரிகைகளில் வெளியாவது, மற்றொன்று நாமே சமூகத்தில் காணுவது. இந்தியாவில் எத்தனை பேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்? இவற்றுள் எத் தனை பேருக்குப் பத்திரிகை வாசிக்கத்தெரியும்? இவர் களுக்குள்ளேயே எத்தனைபேருக்குத் தமக்குத் தெரிந்த விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைகளுக்கு எழுத சக் தியோ, பிரியமோ உண்டு? இதையெல்லாம் நாம் கவ னிப்போமேயானால், 'யௌன இந்தியா'வில் 33 கோடி மக்களில் ஒருவன் தன் தங்கையின் கொடும் வாழ்வைக் குறித்து எழுதியதனாலும் ஏனையவர் எழுதாததினாலும் நம் சமூகத்திலேயே இத்தீமைகள் குறைவு என்று முடிவு கட்டும் காந்தி போன்றவர்களின் கூற்றில் எவ்வ ளவு உண்மை கிடக்கின்றது என்பது நன்கு தெரியும். மற்றபடி எத்தனைபேர் நம்மவருள் கணவன்களால் கொடு ரமாக நடத்தப்பட்டு வருகின்றார்களா இல்லையா என்று தம் அக்கம் பக்கத்தில் கவனித்து வந்திருக்கின்றனர்? அப்படித் தமக்குத் தெரிந்து தம் அயல்வீடுகளில் ஏதே னும் இருப்பின் நகரவாசியானால் 'நமக்கென்ன அந்தக் கவலை, அவன் தன்பெண்டாட்டியை அடிக்கின்றான்' என் றும், நாட்டுப்புறத்தான் ஆகில், எங்கு தான் பரிந்து கொண்டு சென்றால் 'நாளைக்குத்தன் மனைவியைத் தான் அடிக்க நேரிடாது போய்விடுமோ' என்பது போன்ற காரணங்களால் பேசாமலும் இருந்துவிடுவான். நம்

நிலைமை யிவ்வாறிருக்க, இக்கொடுமைகள் நம் சமூகத்தில் மிக்க குறைந்தனவே யென்று கூறுதல் எவ்வளவு நம்பத் தகாததா யிருக்கின்றது. இதுபற்றியே தான் ஜான் ஸ்டுவர்ட் மில்என்னும் பேராசிரியர் கூறுகின்றார். "ஒரு பெண்ணை ஒரு ஆண் வசம் ஒப்புவித்து அவன் ஆதிக்கத்திற்கு ஆளாக்குதலினால் விளையும் கஷ்டம், தீயொழுக்கம் முதலிய கொடூர குணச்செயல்கள் எண்ணிறந்தன. அவைகளை நாம் மறுப்பது தவறு. உண்மையற்றவர்களும், சிந்தனையற்றவர்களுமேதான், தீவிரமானவைகளையும், அல்லது (பத்திரிகை மூலம்) வெளியாக்கப்படுவனவைகளையும் மட்டும் கண்டு இவைபோன்றவை மிகச் சில என்பார்கள். ஆனால் உண்மையாகவே இத்தீமை இருந்து வருவதையுமன்றி மிகவும் கொடூர குணமுடையதாக விருப்பதையும் ஒருவரும் மறுக்க முடியவே முடியாது".

மற்றும் திரு. காந்தியவர்கள் சொல்லுவதைப்போல இந்து சமூகத்தில் எல்லா மனைவியரும் அரசியர் போன்ற செல்வாக்குடையவர்களாயிருப்பின் அதற்காக நாம் அளவுகடந்த சந்தோஷமடையக் கடமைப் பட்டிருக்கின்றோம். ஆனால் அவ்விதம் அநேகம்பேர் இல்லையென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அல்லது அவ்வாறு பெரும்பாலோர் செல்வாக்குடன் இருந்தால் அது விவாஹ ரத்து வேண்டும் என்பவர்களுக்கு எதிர்பாராததோர் உதவிக் காரணமாகும். ஏனென்றால் விவாஹ ரத்து என்பது இல்வாழ்வில் ஒரு சுகமும் பெறமுடியாது தவிக்கும் பெண்களுக்குப் பரிகாரமேயொழிய செல்வாக்குடன் இருப்பவர்களுக்கல்ல. ஆகையால் விவாஹ ரத்துச் சட்டம் ஏற்பட்டால் செல்வாக்குடன் இருக்கும் பெண்களுக்கு அதைப்பற்றிய கவலை உண்டாகவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எங்கேயாவது உடல் நலனும் வலிமையும் மிகுந்திருப்பவன் ஆஸ்பத்திரி ஒன்று பக்கத்தில் இருப்பதால் மருந்து சாப்பிடுதல் உண்டா? நோயாளிகள்தான் செல்லுவார்கள். அதேபோல செல்வாக்குடன் இல்லாத பெண்களைச்

செல்வாக்குடன் உண்டாக்கிவைப்பதைக் காந்தியடிகள் மறுப்பதற்கு இடமில்லையென்று நம்புகின்றோம்.

கடைசியாகக் காந்தி "இத்தீமைகளை விலக்கச் சட்டம் வேண்டியதில்லை. சமூகக் கட்டுப்பாடு அல்லது உலக அபிப்பிராயமே சாலும்'' என்கின்றார். இதற்கு 'மில்' என்னும் ஆசிரியர் கூறிகின்றார் 'இத்தகையதீத்தொழில் புரிபவர் சமூகக் கட்டுப்பாட்டிற்கே தான் அடங்குவர் என்னலாம். ஆனால் இவர்களை யடக்குவது இவர்கள் போன்றவரது அபிப்பிராயந்தான். ஆகையால் அது முடியாத காரியம். இவ்வாறு எப்பொழுது சட்டம் தன்னிடம் ஒரு உயிரை முழுதும் ஒப்படைத்து விட்டதோ அப்பொழுது ஒருவன் அதைக் கொடுமையுடன் நடத்த முயலாமல் இருக்கமுடியுமா? அவ்வாறு முடியுமானால் இப்போது நம்சமூகமானது சுவர்க்கமாயிருந்திருக்கவேண்டும்'. ஆகையால் சட்டம் தான் நாம் பேசும் குறையை யகற்ற சக்தியும் தகுதியும் உடையது என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக ஒரு உயிரையோ அல்லது ஒரு மனிதனையோ முதலில் அடக்கியதும் அல்லது மற்றொருவன் கைக்கொடுத்ததும் சட்டமேயாகுமானால், அப்பொருளையோ அவ்வுயிரையோ அதினின்றும் விடுவிப்பதும், அகற்றுவதும் சட்டமாகத்தான் இருக்கமுடியும். இருக்கவும் வேண்டும். ஹிந்துக்களில் ஒரு பெண்ணை ஒரு கணவன் திருமணம் செய்துகொண்ட பின்னர் அவன் எவ்விதம் நடத்தினாலும், அவள் அத்திருமணக் கட்டினின்று தன்னை விலக்கிக்கொள்ள உரிமையில்லை என்றும், ஒரு பெண் தன் வாழ்வில் ஒரே முறைதான் மணந்துகொள்ள முடியும் என்றும் உண்டாக்கியது சட்டமா? சமூகக் கட்டுப்பாடா? நிச்சயமாக அது சட்டமே. அப்படியானால் அந்நிலைமையிலிருந்து மனைவியைக் காப்பாற்றுவதற்குமட்டுமேயன்றி கணவனையும் அத்தகையக் கொடுஞ்செயல்களினின்று தடுப்பதற்கும் சட்டமே அவசியமன்றிச் சமூக அபிப்பிராயம் ஆகவேயாகாது. சட்டமே முன்வந்து எல்லையிற் கொடு

மைக்குத் தன் மனைவியை ஒரு கணவன் ஆளாக்குவானேல், அவள் அவனுடன் பிணைக்கப்பட்டிருக்கும் மணக்கயிற்றையறுத்தெரியத் தகுதியுடையவள் ஆவாள் என்பது மன்றி அவள் தான் விரும்பின் மற்றொருவனையும் மணந்துகொள்ள வுரிமையுடையவள் ஆவாள் என்றும் கூறவேண்டும். அவ்வாறு இல்லாது சட்டம் இழைத்த தீமையைச் சமூகம் தீர்க்கும் என்பது பெரிய தவறாகும். இவ்வாறு, காந்தியும் ஒப்புக்கொள்ளுவதைப்போல், ஒரு கணவன் தன் மனைவியைக் கொடுமையோடு நடத்துதல் தீது என்று ஒப்புக்கொண்ட பின் அக்கொடுமைக்கு மூலகாரணமாயிருக்கும் சட்டத்தை நீக்குவதன்னியில் அதற்குப் பதிலாக மற்றொரு நன்மை பயக்கும் சட்டம் உண்டாக்காதிருப்பின் அது ஒரு பெரிய குற்றமாகும். ஏனெனில் திரு. **எட்மண்ட் பர்க் (Edmund Burke)** என்பவர் கூறுவதைப்போல் "தீய சட்டங்களே கொடுங்கோன்மைகளுள் மிகக் கொடியதாகும்".

இரண்டாவதாக **மில்**கூறுவதாவது, இத்தகைய செயல்களைச் சமூக வாயிலான் அகற்றுதல் மிகவும் முடியாத காரியம். உலக அபிப்பிராயம் என்பது எவ்வளவு விரிவான பொருளுடையதோ, அவ்வளவு உறுதியற்றதாயும் இருக்கின்றது. ஒரு தேசத்தில் எவ்வளவோ சமூகங்களும் ஒரு சமூகத்தில் எவ்வளவோ பிரிவுகளும் இருந்து வருகின்றன. ஆகையால் பொதுவாக உலக அபிப்பிராயம் என்று கூறினும் ஒருவன் தன் சமூகத்தில் அதிலும் தன் அந்தஸ்து, கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியனவுடையவர்களது அபிப்பிராயத்தில்தான் கட்டுப்படும் நிலைமையில் இருந்து வருகின்றான். கூலிவேலை செய்து தினம் எட்டணவோ பன்னிரண்டணவோ சம்பாதிக்கும் ஒரு எளிய குடியானவன் எந்தச் சமூகக் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றான்? தன்போன்றே தொழில் புரிந்து வருபவர்களும் தன்போன்றே யறிவு, ஒழுக்கம் முதலியவற்றிற் கீழ்ப்பட்டவர்களும் ஆகிய

மக்களின் அபிப்பிராயத்தினுல்தானே. அவ்வாறுயின் அவனைக் காட்டினும் அவனைச்சுற்றியிருப்பவர்கள் எவ்வாறு ஒழுக்கம் மிக்கவர்களாயிருக்க முடியும்? எப்படி யவனை யடக்கமுடியும்?

ஸ்மிருதியும், இந்து சட்டமும்.

'ஒரு சட்டத்தால் உண்டாக்கப்பட்ட குற்றங்களை யும் குறைகளையும் மற்ருெரு சட்டம் கொண்டே நீக்க முயலவேண்டும்' என்னும் உயரிய உண்மையை யனைவரும் ஒப்புக்கொள்ளத் தயாராயிருப்பார்கள். ஆனுல் நம் இந்து சமூகத்தைப் பொறுத்தமட்டில் சிலர் கூறலாம். "இந்து மதமும் அதற்கடிப்படையான இந்து சாஸ்திரங்களும் அவைகளைத் தழுவி நிற்கும் இந்து சட்டமும் இத்தகைய விவாஹரத்திற்கு இடம் கொடுக்க முடியாத நிலைமையி லிருக்கின்றனவே. நீவிர் கூறுவதைப்போல் விவாஹ ரத்துச் சட்டம் ஒன்று ஏற்படுத்தி விடுவோமேயானுல் அது மதம், சாஸ்திரம், சட்டம் இவற்றிற்கு மாருக விருக்குமே இதற்கு என் செய்வது ?"

இத்தகைய கேள்வி பிறப்பது நிச்சயம். அதற்குத் தக்க விடையிறுக்கவும் நாம் தயாராயிருக்கின்ருேம். இவ்வாறு நம் விவாஹரத்து மசோதாவிற்குத் தடை கூறும் மத மோகத்தினர் கேள்விக்குத் தகுந்த விடை கூறிவிடுவோமாயின் 'மதம்' 'சாஸ்திரம்' என்பனபேரால் எழும் கூக்குரலையடக்கியவர் ஆவோம் என்று நினைக் கின்ருேம். மதம் என்பதும் சாஸ்திரம் என்பதும் ஒரே பொருளைக்குறிக்கும் ஆதலின் நம் இந்து சாஸ்திரங்கள், அதாவது மனுவிதி முதலியவைகளைப் புகட்டும் ஸ்மிருதி கள் இவ்விவாஹரத்து அல்லது மறுமணம் என்பதைப் பற்றி என்ன கூறுகின்றனவென்று சற்று கவனிப்போம் உண்மையில் இவ்விஷயத்தைப்பற்றி ஸ்மிருதியாசிரியர் களுக்குள் அபிப்பிராயபேதம் இருந்துதான் வந்திருக் கின்றது. சிலர் "ஒரு மனைவி சிற்சில காரணங்களை

முன்னிட்டு மறுமணம் பண்ணிக்கொள்ளலாம்'' என அனுமதித்துள்ளார்கள். ஆனால் சிலரோ "ஒரே முறை தான் ஓர் பெண் மணந்துகொள்ள முடியும், ஒரே முறை தான் ஒரு தந்தை தன் மகளைத் தானம் செய்யமுடியும்'' என்று விதித்துள்ளார்கள். மற்றும் ஒரே ஆசிரியர் மேலே சொன்ன இரண்டுவித அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதும் ஒரு ஆச்சரியமல்ல. இது எவ்வாறாயினும், சமூகசீர்திருத்தக்காரர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் அதைப்பற்றிக் கவலை கொள்ளப்போவதில்லை. ஆனாலும் வைதீகர்களையும், மதப்பேயின் அடிமைகளையும்கூட அவர்கள் தம் சாஸ்திரங்கொண்டே திருப்தி செய்து நம் சீர்திருத்தங்களை நுழைக்க முயலுவதால் நாம் ஒருவித நஷ்டமும் அடையப்போவதில்லை.

ஸ்மிருதி ஆசிரியர்களுக்குள் தலைசிறந்தவர்களுட் சிலர் விவாஹரத்து என்பதை யனுமதித்துள்ளார்கள். மனு என்பவர் 9-வது அத்தியாயம் 76-வது சூத்திரத்திலும், கௌதமர் 18-வது அத்தியாயம் 15, 17வது சூத்திரங்களிலும், வசிஷ்டர் 17-வது அத்தியாயம் 78, 79-வது சூத்திரங்களிலும், பராசரர் 4-வது அத்தியாயம் 30-வதுசூத்திரத்திலும், "ஒரு பெண் தக்க காரணங்கள் இருப்பின் மறுமணம் பண்ணிக்கொள்ளலாம்'' என அனுமதித்துள்ளார்கள். இந்நால்வரேயன்றி நாரதர் என்னும் ரிஷியும் பின் வருமாறு கூறுகின்றார். 'தன் கணவன் காணுமற்போன காலத்தும், இறந்துபோன காலத்தும், துறவடைந்த காலத்தும், அவனது ஆண்மை குன்றிய காலத்தும், அவன் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்ட காலத்தும், ஆகிய இவ்வைந்து நியாயமான காலங்களிலும் ஒருமனைவி மறுமுறை மணந்துகொள்ளுதல் தகுதியுடையதாகும். ஆகவே சாஸ்திரங்களின் படியும் தக்க காரணங்கள் இருக்குமேல் விவாஹரத்து செய்துகொள்ளுதல் இயையும்.

'விவாஹ விடுதலையும்' 'விதவா விவாஹமும்' இந்து மதத்திற்கு மாறுபட்டுள்ளன என்று கூறப்படுவதின்

முக்கிய காரணம் இந்துமதத்தினர் விவாஹம் என்பதைப் பற்றிக் கொண்டுள்ள கொள்கையே யாகும். இந்து மதத்தின்படிக்கு விவாஹம் தெய்வத்தன்மையை யுடையதாகும். விவாஹம் என்பது ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இருக்கும் ஒரு ஒப்பந்தம் (Contract) அல்ல, அது தெய்வீகத்தன்மை (Sacrament) யைக்கொண்டதொரு முறையாகும் என்பர் இந்துக்கள். ஆகவே இவ்விவாஹக் கட்டைச் சட்டத்தாலோ மனிதனுலோ ரத்துசெய்தல் முடியாத காரியம் இத்தகைய மணவிடுபடாமை (Indissolubility of Marriage) இந்து விவாகத்தின் முக்கியமானதொரு இலக்கணம் ஆகும். கணவன் உயிரோடு இருந்தாலும் அல்லது இறந்தாலும் அவனது மனைவி அம்மணக்கட்டினின்றும் விடுபடுதல் முடியாது என்பது இந்துக்களின் ஆதிக்கொள்கை. ஒரு ரிஷிசொல்லுகின்ருர் 'இறந்த கணவனின் பாதியுடல் அவன்கோள் இல்லாள்கண் என்றும் உளது' ஆகவே கணவன் இறந்த பின்னும்கூட அவனது உடலிற்பாதி அவனது விதவையிடம் இருக்குமானுல் அவன் உயிரோடு இருக்கும்போது அவனது முழு உடலும் அவன் மனைவியிடம் இருக்கும் என்று பெறப்படுகின்றது ஆகவே விவாஹ விடுதலையையும் விதவா விவாஹத்தையும் எதிர்ப்பதின் அடிப்படையான காரணம் இந்து மதத்தின் விடுபடாத் தன்மையே யாகும். ஆனுல் இத்தன்மை இந்துக்களால் வரயளவிற் போற்றப்பட்டு வந்துகொண்டிருந்த போதிலும் இது நெடுநாட்கு முன்னரே நீக்கப்பட்டுவிட்டது. 1856வது ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விதவா விவாஹச் சட்டம் (Act XV of 1856) இத்தன்மையை யடியோடு தாக்கிவிட்டது. அதுநாள் முதற்கொண்டு விதவா விவாஹம் இந்து சட்டத்திற்கு ஒத்ததாகிவிட்டது. ஆகவே விதவா விவாஹம் சட்டத்திற்கு ஒத்ததானுல் அதே போன்ற குணமுடைய விவாஹ விடுதலையை மட்டும் 'மதம்' 'சாஸ்திரம்' 'சட்டம்' என்பதின்பேரால் மறுப்பது ஒரு பெரிய மடமையாகும்.

இனி நாம் காணக் கிடப்பது என்னவென்றால், இந்துக்களுக்கென்று தனியாக 'இந்து விவாஹ ரத்துச் சட்டம்' என வொரு சட்டம் இல்லாவிட்டாலும கூட, தற்காலத்தில் இந்துக்கள் என்று தம்மாலும், பிறராலும், அரசாங்கத்தாராலும் கருதப்பட்டுவரும் எண்ணிறந்த மக்கள் தங்கள் விவாஹங்களை ரத்து செய்துகொண்டே தான் வருகின்றார்கள் என்பதுமன்றி, அவ்வாறு அவர்கள் செய்துகொள்ள இப்போதிருக்கும் சில சட்டங்களும் இடம் கொடுக்கின்றன என்பதுமேயாகும். அத்தகைய வழிகளைப்பற்றிச் சற்று கீழே காண்போம்.

முதலாவது, பொதுவாக இந்துசட்டம் விவாஹரத்து என்பதை யனுமதிக்காவிட்டாலும், 'எந்த ஒரு ஜாதியிலாவது இருதம்பதிகள் தம் மணத்தைப் பழக்கப்படி ரத்துசெய்துகொள்ளலாம்' என்று ஒரு வழக்கம்இருந்து வந்துள்ளதாக ருசுப்படுத்தப்பட்டு விடுமேயானல் நம் நீதி மன்றங்கள் அவ்வழக்கத்தை ஒப்புக்கொண்டு அப்படி அதன்படி செய்துள்ள விவாஹ ரத்தையும் அங்கீகரித்துக்கொள்ளும் நிலைமையில் உள்ளன. ஆனால் அந்த வழக்கமானது, நீண்டகாலமாகவும், அந்த ஜாதி மக்கள் அனைவரும் அறியும்படியானதாகவும், அந்த ஜாதிக்காரர்களின் கட்டுப்பாட்டின்படி அனுசரிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். இவ்விதமானதொரு தீர்ப்பு நம் சென்னை ஹைகோர்ட்டில் (17 Madras Page 479) சங்கரலிங்கன் V. சுப்பன் என்னும் வழக்கில் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கின்படி திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த குயவர்கள் என்னும் ஜாதியில், ஒரு பெண் தன் கணவனது பரிசப்பணத்தை மீண்டும் கொடுத்துவிடுவாளேல் அவள் தன் முதல் மணத்தை ரத்துசெய்துகொண்ட நிலையினளாகி மறுமணம் புரிந்து கொள்ளவும் தகுதியுடையவள் ஆவாள்' ஆகவே இத்தகைய ஹிந்துக்களுள் ஒரு பகுதியினராய குயவர் என்னும் ஜாதியினர் அன்றி இவர்போன்ற வேறுபல ஜாதியினர்களும் விவாஹரத்தைக் கையாளுவதால் நம் மதம் போய்விட்டதா?

மற்றும், மேலே சொன்ன வழியேயன்றி ஹிந்து தம்பதிகள் இருவர் தம் விவாகத்தை ரத்துசெய்து கொள்ளவும் ஒரு சூழ்ச்சியிருக்கின்றது. அச்சூழ்ச்சிக்கு ஒரு சட்டம் இடம் கொடுக்கின்றது. அதாவது ஒரு கணவன் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிவிடுகின்ருன் என்று வைத்துக்கொள்ளுவோம். உடனே அத்தினத்திலிருந்து ஒரு ஆறுமாத காலம் அவனது மனைவி அவனைப் புறக்கணித்துத் தனியே இருந்துவிடவேண்டும். அவ்வாறு மதமாறிய அக்கணவன் தன் மனைவியைத் தன்னிடம் வாழ உத்திரவு இடும்படி கோர்ட்டாரைக் கேட்டுக் கொள்ளவேண்டும். நீதிமன்றத்தார் 'அம்மனைவியை ஒருவருடத்திற்குள்ளாகத் தன் கணவனிடம் சேர்ந்து விடும்படிக்கும் அவ்வாறு செய்யாவிடின் அவர்கள் மணம் ரத்து செய்யப்பட்டு விடும்' என்றும் ஆக்ஞாபிப்பார். அதன் பின் ஒருவருடகாலம் அவள் தன் கணவன் மதத்தைவிட்டு மதம் போய்விட்டதற்காகத்தான் அவனது மனைவியாக இருக்க முடியாதென்று கூறுவதுமன்றி அவனுடன் சம்போகமும் சேர்க்கையும் வைத்துக்கொள்ளாமல் இருந்து விடுவாளேல் நீதிமன்றத்தார் உடனே "மதமாறினோர் மண ரத்துச்சட்டம்" (Native Converts' Marriage Dissolution Act) என்பதின் கீழ் அவர்களது மணத்தை ரத்துசெய்து விடுவார்கள். வேண்டுமெனின் அக்கணவன் மீண்டும் இந்துவாகிவிடலாம், இது ஒரு சூழ்ச்சியேதான்; இருந்தாலும் இதற்கும் சட்டம் இடம் கொடுக்கின்றது என்பதுதான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம்.

மேலே சொல்லிய சட்டமேயன்றி, ஒரு பெண் தன் கணவன் உயிரோடிருக்கும்போதே மறுமணம் செய்துகொள்ளவும் மற்றொரு வழி உண்டு. இம்முறை சட்டத்தில் (Fiction) பிக்ஷன் என்று கையாளும் ஒரு முறையின்பால் ஏற்பட்டது. அது பின் வருமாறு:—எவிடன்ஸ் ஆக்ட் (Evidence Act) செக்

ஷன் 108ன்படிக்கு ஒரு கணவனானவன் தன் மனைவியை விடுத்து ஏழு வருஷகாலம் ஒருவருக்கும் இருப்பிடம் தெரியாதபடி எங்கேனும் சென்று விடுவானேல், அவ் வேழு வருடம் முடிந்தவுடன் சட்டமானது அவன் இறந்துவிட்டான் என நிச்சயித்துவிடுகின்றது. அவன் உண்மையாகவே உயிரோடு எங்கேயாவது இருக்கலாம். அல்லது அவ்வேழுவருடம் கடந்தவுடன் தன் ஊருக்கே திரும்பி வரலாம். ஆனல் சட்டம் அதைப்பற்றிக் கவனிக்காது. ஏழு வருடம் அவன் இருப்பிடம் ஒருவர் செவியிலும் படாதிருக்குமேல் அவன் சட்டப்படிக்கு இறந்தவன் ஆவான். ஆகவே அவன் சட்டப்படிக்கு இறந்துவிட்டதால் அவன் தன் மனைவியை ஏழாவது வருடம் முடிந்ததிலிருந்து தன் சொந்த மனைவியாகப் பாவிக்க முடியாது. அவனுக்கு நீதி மன்றத்தாரும் அவள் வயின் தம்பதிவுரிமையை அளிக்கமாட்டார். ஆகவே அம்மனைவி, உண்மையாக இல்லாவிடினும் சட்டத்தின்படிக்கு விதவையாகி விடுகின்றுள். நாம் மேலே கண்டபடி ஒரு ஹிந்து விதவை மறுமணம் சட்டப்படிக்குச் செய்துகொள்ளலாம். ஆகவே உண்மையாகவே கணவன் உயிரோடிருப்பினும் ஒரு மனைவி மறுவிவாகம் இப்போதிருக்கும் சட்டப்படிக்கே செய்துகொள்ளலாம். இச் சட்டத்திற்கு முன்னதாகவே மனுவும், நாரதரும் எட்டு வருடகாலமாகவும், கௌதமர் ஆறு வருடகாலமாகவும், வசிஷ்டர் ஐந்துவருடகாலமாகவும், ஒரு கணவன் கேள்விப்படாதபடி போய்விட்டால் அவன் மனைவி மறுமுறை மணந்துகொள்ளலாம் எனவும், ஹிந்து சட்டமும் 12 வருடம் கழிந்தபின் செய்துகொள்ளலாம் எனவும் விதித்திருந்தனர். இவைகளையெல்லாம் ஒழித்து நாம் மேலே கண்டபடி எவிடன்ஸ் ஆக்ட் ஏழுவருடமாக்கியது. ஆக இது மற்றொரு மறுமணச்சூழ்ச்சி. இதனல் ஹிந்துமதம் போய்விட்டதா ?

ஆகவே நாம் இதுவரை கண்டுவந்தபடி எந்தச்சாத்திரத்தின் பேராலும், எந்தச்சட்டத்தின்பேராலும் விவா

ஹரத்தை மக்கள் ஆக்ஷேபிக்கின்றார்களோ அந்தச்சாத்திரமும் அந்தச்சட்டமும் விவாஹரத்தை யனுமதிக்கின்றன. ஆகவே சட்டமானது 'மதம்' என்பதின் உடலையும் உயிரையும் தின்றுகொண்டே வந்துவிட்டிருக்க அதன் வீண் நிழலைப்பற்றிக்கொண்டு உழலும் மாந்தரின் மடமை இருந்தவாறென்னே! இப்பொழுதும்கூட 'பல ஹிந்துக்கள் விரும்பினால் தம் விவாஹத்தை ரத்து செய்துகொள்ளலாம்' என்னும் நிலைமையில் இருந்து வருவதை நாம் ஒப்புக்கொள்ளுவதன்னியில் அதை அங்கீகரித்தும் நேரானதொரு சட்டம் ஏற்படுத்திவிட வேண்டியது நம் கடமையாகும். சுற்றுவழியிற்சென்று பெறும் விவாஹரத்தை நேரான வழியில் நம்மக்கள் அடையும்படி செய்தல் நமது கடமை. அதையேதான் நாம் மேலேகண்டபடி சாத்திரம், சட்டம் இரண்டும், நமக்கு வலியுறுத்துகின்றன.

விவாஹ ரத்தும் ஒழுக்கமும்.

விவாகரத்தை எதிர்க்கும் நம் பகைவர்கள், தக்க காரணங்களான ஆயுதங்களைக்கொண்டு நாம் பலமாகத் தாக்கியதற்கஞ்சித் தோல்வியுற்றுப் பயந்தோடிக்கடைசி முறையாகத்தங்களைக்காப்பான் வேண்டி "மதம்" என்னும்உயரிய மதிற்கோட்டைக்குள் ஒளித்தனர். ஆனால் நாம் அப்பொய் மதிற்கோட்டையையும் பொடிபடத் தாக்கி நம் மாற்றலரைப்புறங்காட்டச்செய்தபின் அவர்கள் இனி நிச்சயமாக 'ஒழுக்கம்' என்னும் ஆழ்ந்தகன்ற அகழியின் பின் ஒளித்துக்கொண்டு நம்மோடு போர் புரிய எத்தனிப்பார். ஆகவே இவ்வொழுக்கம் என்னும் அகழியையும் தூர்த்துத்தகர்த்து நம் எதிரியைத் துரத்தியடிப்பின் நாம் கைக்கொண்டுள்ள விவாகவிடுதலையின் இன்றியமையாமையை நனிநிலை நாட்டியவர் ஆவோம்.

எனவே, நம்மைநோக்கி நம் எதிரிகள் கூறுவதென்னவெனில் "மதத்தின்படி நீவீர் கூறும் விவாகரத்து குற்றமில்லாததாகவும், ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும்

இருக்கலாம். ஆனால் அத்தகைய விவாகரத்து என்னும் முறையை நாம் கையாள முற்படின் அதனால் நம் சமூகத்தில் விளையும் இழுக்கும், ஒழுக்கக்குறைவும் சொல்ல முடியாத அளவாகும் என்பதை உணர்ந்தீர் இல்லையோ? விவாகரத்தைக் கையாளும் அமெரிக்காவையும், ரஷியாவையும் அவைகளில் அதன் காரணமாக விளையும் ஒழுக்கக் குறைவையும் கண்ணுற்ற பின்னும் விவாகவிடுதலை வேண்டுமென யாரேனும் விழைதல் இயலுமோ?"

இத்தகைய கூற்று நம் எதிரிகள் வாய்ப்படல் மிகவும் இயல்பே. ஆனால் இதற்குத்தக்க காரணம் காட்டி விடையிறுக்கவும் நாம் தயாராய் இருக்கின்றோம். இவர்கள் மேலே கூறிய வார்த்தைகளில் இரண்டு கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவதாக விவாகரத்தைக் கையாளும் தேசமும், சமூகமும் ஒழுக்கம் அற்றன என்பது. இரண்டாவது, விவாகரத்துச் சட்டம் என்பது எல்லாக்காலங்களிலும், எல்லாத் தேசங்களிலும் ஒரே விதமானது. இவ்விரண்டு கேள்விகளையும் தனித் தனியே ஆராய்ந்து அவைகளின் உண்மையை நாம் இனிக்காணுவோம்.

விவாகரத்தைக் கையாளும் மக்களும், சமூகமும் ஒழுக்கம் அற்றவர்கள் என்னும் கூற்று மிகவும் வியப்பைத் தரக்கூடியதேயாகும். இவ்வுலகத்தில் இருக்கும் படியான தேசங்களுள் பல இம் முறையைக் கையாண்டு வருகின்றனவே, அவையனைத்தும் ஒழுக்கம் என்பதே இல்லாதிருக்கின்றனவா? அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்காத்லாண்டு, பிரான்சு, ஜர்மனி, பெல்ஜியம், ஹாலண்டு, நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஆஸ்டிரியா, ஹங்கேரி, கிரீஸ் கடைசியாக ஸ்பெயின் முதலிய தேசங்கள் இவ்வளவும் ஒழுக்கம் அற்றவைகள் என்றும் போர்ச்சுகலும், இத்தாலியும்இந்துக்களுள் சிலருமே ஒழுக்கத்திற்கு உறையுள் என்றும் ஒருவன் கூறுவானேல் அவனது மடமையையும், புன்மதியையும் கண்டு நாம் வருந்துவதா? அல்

லது நகைப்பதா ? நமது இந்தியதேசத்தையே எடுத்துக் கொள்ளுவோம். எட்டுக்கோடி மக்களுக்குக் குறையாத முகம்மதிய சமூகத்தினரும் ஏறக்குறைய அதேதொகை யைக்கொண்ட ஆதிதிராவிட மக்களும் [தம்ஜாதிவழக்கப் படி] விவகாரத்தைக் கையாண்டு வருகின்றூர்கள். மற் றும், பார்ஸீகர்களாகிய ஒரு பெரும் வகுப்பினரும், பிரா டஸ்டண்டு கிறிஸ்தவர்களும், விவாகரத்தைக் கையா ண்டு வருகின்றனர். இத்தனைகோடி மக்களும் ஒழுக்கம் இல்லாதவர்கள் என்று கூற எந்த அறிவுடைய மனிதனு வது முன்வரமுடியுமா ? என்று கேட்கின்றோம். இஃதே யன்றி ஜாதியின் கொடுமை மிகவும் குறைந்துள்ள பஞ் சாப் மாகாணத்தில் அனேகமாய் ஒவ்வொரு ஜாதியிலும் மறு மணப்பழக்கம் இருந்துகொண்டுதான் வரு கிறது. இந்துக்களாகிய இரஜபுத்திராகளில் ஓர் பிரிவினரா கிய ஹோஷங்காபாத்தைச் சேர்ந்த ஜாடம் என்பவர்களு க்குள் மறுமணம்(விவாஹரத்து)வழங்கி வருகின்றது.அவர் கள் பெண்களில்பலர் தம்வாழ்நாட்களில் ஒன்பதுஅல்லது பத்துமுறை மணந்துகொள்ளுதல் சகஜமாம். மற்றும் அகமதாபாத்தைச்சார்ந்த சோம்பூரா பிராமணர்களும், ஐக்கிய மகாணத்தைச்சார்ந்த லோதீஸ் என்பவர்களும் தென்னுட்டிலுள்ள லிங்கதாரிகளாகிய வீர சைவர்களுட் பலரும் விவாகரத்தையும் மறுமணத்தையும் பெருவாரி யாகக் கையாண்டு வருகின்றூர்கள். ஆக இவ்வளவு கோடிப் பேர்களும் 'ஒழுக்கம்' என்பது இல்லாமல் இருக்கின்றூர்களா? என்று கேட்கின்றோம். ஆகவே, உற்றுநோக்கின் சில மாகாணங்களில் உள்ள பார்ப்பனர் களும், 'சூத்திரர்' என்று சொல்லப்படுவருள் மேல்ஜாதி யினர் என்று தம்மைத்தாமே கூறிக் கொள்பவராகிய சிலருமே தான் இவ்விவாகரத்தைக் கையாளாமல்இருந்து வருகின்றனர். ஏறக்குறைய ஏனைய மக்கள் அனைவரும் இதை ஏதாவது ஒரு முறையில் கைப்பற்றியே தான் வருகின்றூர்கள். அவ்வாறு மேலே கூறிய சிறுபாலோர் விவாகரத்தைக் கொள்ளாததினுல் ஒழுக்கத்தில் எவ்வாற்

ரூனும் எனையவரைக் காட்டிலும் உயர்ந்தவர்களாய் இருக்கின்றார்களா? என்ற பிரச்சினை வேறு. உண்மையில் ஏனையவரைக் காட்டிலும் இவர்கள் ஒழுக்கத்தில் தாழ்ந்தவராகவே இருக்கின்றார்கள் என்பது எம்துணிபு. இதுவரையும் தம்மிடத்தில் விவாகரத்து இல்லாததால் தாம் ஒழுக்கத்தில் உயர்ந்தவர் என்று கூறிக்கொண்டுவந்த உயர்ந்த ஜாதி ஹிந்துக்களின் பெருமைப் பேச்சும் இனிவர இடமில்லை. ஏனெனில் சுதேச மன்னருள் தலைசிறந்தவரும், சீர்திருத்தத்தில் அளவுகடந்த ஆர்வங்கொண்ட அருமன்னரும், உண்மையான 'ஹிந்து மதம்' என்பதைப் பின்பற்றிவருவோம் என்று கூறுபவரும் ஆய உயர்திரு **பரோடா மன்னர்**, இவ்வருடம் தம் தேசத்தில் இந்துக்களுக்கொரு விவாக ரத்துச் சட்டம் ஏற்படுத்தி அதுவும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. இவ்வுயர்தர மன்னராவது, அவர் செய்யும் சீர்திருத்தச் சட்டங்களை ஆர்வங்கொண்டு அனுஷ்டித்துவரும் அறிவுமிக்க அவர் குடிகளாவது ஒழுக்கத்தில் இம்மியேனும், புராண ஆபாச மூட்டையைச் சுமந்து மதமென்னும் கள் குடித்து, மயக்கம் எய்தி வாயுழரும் மூடர்களைக் காட்டிலும் குறைந்தவர் என்று கூற எந்த மனிதன் முன் வருவான்? ஆகவே விவாக ரத்தைக் கையாளுபவர்கள் ஒழுக்கம் அற்றவர் என்னும் கருத்து முற்றிலும் குற்றமுடையதோர் மூடக்கருத்தேயாகும்.

இரண்டாவது, நம் எதிரிகள், "அமெரிக்கா தேசத்திலிருக்கும் விவாக ரத்துச் சட்டம் தீயது; அதனால் அங்கு ஒழுக்கம் சீர்குலைய ஏதுவாகின்றது" என்று கூறின் அதை நாம் ஒருக்கால் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அமெரிக்காவில் இருக்கும் விவாக ரத்துச் சட்டம் ஒழுக்கத்தைக் குறைப்பதால் உலகத்தில் இப்பொழுது இருக்கும் விவாக ரத்து முறைகளும், இனி உண்டாக்கப்படும் விவாக ரத்து முறைகளும் ஒழுக்கத்தைக் குறைக்கும் பாற்றது என்று கூறின், அது அவ்வாறு கூறுவோரின் மடமையையும், அமெரிக்கா சட்டத்தைப் பற்றிய

அறியாமையையும் நனி காட்டுகின்றதால் நாம் அதை முற்றிலும் மறுத்துக் கண்டிக்கவும் கடமைப்பட்டிருக் கின்றோம். விவாக ரத்து முறை என்பது எல்லாத் தேசங்களுக்கும் ஒன்றே என்று அவர் எண்ணுதல் கூடாது. அதிலும் நல்ல முறையென்றும், கெட்டமுறை யென்றும் உள்ளது. விவாக முறையிலும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதும், உயர்தரமானதும், சமூகத் திற்குத் தீங்கு விளைப்பதும், கீழ்ப் பட்டதுமான முறை யும் இப்பொழுது நம்மிடத்தில் இல்லையா? தேசத்திற்கு தேசம் சமூகத்திற்குச் சமூகம் விவாக முறைகள் மாறு படுகின்றன. ஆக நல்ல முறைகள் அவற்றுள் சில இருப் பதால் பொதுவாகவே விவாகம் என்பது நல்லது என்றோ அல்லது தீயமுறைகள் சில விருத்தலால் விவாகம் என்பதே பொதுவாகத் தீயது என்றோ நாம் கூற முடியுமா? எந்த ஒரு ஆணுவது தான் முதன் முதல் சந்திக்கும் எந்தப்பெண்ணிடமும் சேர்ந்து கொள் ளுதலாகிய ஒரு பழக்கத்தைச் சிலர் ‘விவாகம்’ என்று கூறுகின்றனர். ஆகையால், இதைக் கண்டவுடன் விவாக மென்பது கொடியது; அதனுல் ஒழுக்கம் குன்றிவிடும் என்று அறிவுள்ள மக்கள் கூறமாட்டார். அது போன் றது தான் விவாக விடுதலைச் சட்டமும். ஒரு தேசத்தில் தீய சட்டம் இருப்பின் மற்ருென்றில் நல்லதொரு சட்டம் வழங்கி வருகின்றது. வேண்டுமெனின் நாம் பிறரிடம் காணும் குற்றங்களை நீக்கி, நல்லதொரு விவாக ரத்துச் சட்டம் கொள்ளலாம். ஆகவே இரண்டாவது கருத்தும் உண்மை யற்றதாகுமெனக் கண்டோம்.

அமெரிக்கா தேசத்தில் வழங்கி வரும் விவாக ரத்துச் சட்டங்களைப் பற்றியும், அவைகளால் விளைகின் றன என்று சொல்லப்படும் திமைகள் நம் தேசத்தில் விளைய இடமின்மையைப் பற்றியும் கூறுவதற்கு முன் னர் ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களில் வழங்கி வரும் விவாக ரத்துச் சட்டங்களைப் பற்றி வெகு சுருக்க மாய்க் காண்போம். சீர்திருத்தத்திற்குப் (The

Reformation) பின்னர் அதற்கு முன் வழங்கிவந்த மணவிடு படாமை என்னும் கொள்கை நீங்கியதுமன்றி மதத்திற்கும் மணத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும் மக்கள் உணரவாரம்பித்து விட்டனர். ஆதலால் பொதுவாக ஜர்மனி, சுவிஜர்லாண்டு, ஹாலண்டு டென்மார்க், ஸ்வீடன், நார்வே முதலிய தேசங்களில் இரு தம்பதிகளில் யாரேனும் ஒருவர் சோரம் செய்தாலும், அவர்கள் தம் மணத்தை ரத்து செய்துகொள்ளலாம். ரோமன் கத்தோலிய மதத்தின் தேசமாகிய பிரான்சில் மணத்தின் தெய்வீகத் தன்மைக் கொள்கை 1789ஆம் ஆண்டில் நடந்த பெரும் புரட்சி (French Revolution) வரையிலும் தலையோங்கிவந்தது. அதன் பின்னர் 1792வது ஆண்டில் அளிக்கப்பட்ட விவாகச் சுதந்திரத்தின் காரணமாகவும், விவாக ரத்துச் சுதந்திரத்தின் காரணமாகவும் 1797வது வருடத்தில் ஏற்பட்ட விவாக விடுதலைகளின் தொகை அவ்வாண்டு நடாத்தப் பட்ட விவாகங்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாயிருந்தன. மீண்டும் இத்தகைய தீவிரச் சுதந்திர நிலைமை மாறி, 1884-வது வருடம் விவாகரத்துச் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன்படி இரு தம்பதிகளில் எவரேனும் ஒருவர் சோரம் செய்யினும், எவரேனும் ஒருவர் பெருங்குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனையளிக் கப்படினும் அவர்களது மணம் ரத்துசெய்யத் தகுதி யுடையதாகும். இதுமட்டுமன்றி சட்ட விலக்கினால் நீக்கப்பட்டிருந்த தம்பதிகளும் மூன்று வருடங்கள் கடந்தபின் தம் மணத்தை ரத்து செய்தும் கொள்ள லாம். பெல்ஜியத்தின் விவகாரத்துச் சட்டமும் இதே போன்றது ஆகும். ஆஸ்திரியா ஹங்கேரி, முதலிய தேசங்களின் சட்டங்கள் சோரம், தண்டனை, தனியே விட்டு ஓடிப்போதல் கொடூர நடத்தை ஆகிய இக்கார ணங்களுக்காக விவாக ரத்தை யளிக்கின்றன.

இனி இங்கிலாந்திலிருக்கும் விவாகரத்தைப் பற்றி யும் சுருக்கமாகக் காணுதல் இன்றியமையாததாகும்.

நீண்டகாலமாக, இங்கிலாந்தில் இரு தம்பதிகள் தம் விவாகத்தை ரத்து செய்துகொள்ள விரும்பின் அது ஒரு பெரிய காரியமாகவேதான் இருந்து வந்தது. ஒரு சாதாரணமான மசோதாவை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு பணச்செலவும், காலதாமதமும் பிடிக்குமோ, அவ்வளவும் ஒரு விவாக ரத்துப் பிரேரேபணைக்கு அவசியமாயிருந்தது. அது பிரபுக்கள் சபையிலும், காமன்ஸ் சபையிலும் இரண்டிலும் நிறைவேற வேண்டியிருந்தது. ஆகவே இவ்வாறு இரு தம்பதிகள் தம் மணத்தை ரத்து செய்துகொள்ளுதல் மிகவும் கஷ்டமானதால், இது சிற்சில பிரபுக்களுக்கும், பணக்காரர்களுக்குமே இயன்றதாய் இருந்து வந்தது. இவ்விதக் குறையைத் தீர்க்கும் பொருட்டு 1857-வது வருடம் **விவாகரத்து கமிஷன் (Divorce Commission)** ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் அறிக்கையின்படி சுமார் 1858-வது ஆண்டில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதுதான் இப்பொழுது ஏறக்குறைய வழங்கப்பட்டு வருகின்றது. அதன்படி மனைவியின் சோரத்தின் காரணத்தாலும், கணவனின் சோரத்தோடு கொடூர நடத்தையின் காரணத்தாலும், இன்னும் இரண்டொரு காரணத்தாலும் ஒரு விவாஹத்தை ரத்து செய்ய முடியும். இச்சட்டத்தைக் குறித்து இன்னும் விவாதம் நடந்து கொண்டு வருகின்றது. இப்பொழுது வழங்கப்பட்டு வரும் இச்சட்டம் போதிய அளவு சௌகரியம் அளிக்கக்கூடியதாயில்லை என்று கிளர்ச்சி செய்து வருகின்றார் ஒரு கூட்டத்தார். அதை வழக்கம்போல் மறுக்கவும் சிலர் தயாராயிருக்கின்றார்கள். மற்றும் சிலர் விவாகரத்து கூடவேகூடாது என்றும் கூறுகின்றார்கள். **லார்ட் ஹ்யூ சேஸில் (Lord Hugh Cecil)** என்பவர் சில நாட்களுக்கு முன்னர், மணமானது தெய்வீகத்தன்மையுடையதால் அதை மதமாயினும், மனிதராயினும், குருக்களாயினும் ஆகிய ஒருவராலும் ரத்துசெய்ய முடியாதென்றும், அதை ரத்து செய்தல் அவசியமென்று

புலப்பட்டாலும்கூட அவ்வாறு செய்தல் இயலாதென்றும் கூறியுள்ளார். இதற்கு மாறுன அபிப்பிராயம் பலர் கொண்டுள்ளார். விவாஹரத்தின் அவசியத்தைப் பற்றியுமேயன்றி, அச்சட்டத்தை இன்னும் நெகிழ்ச்சியாக்க வேண்டுமென்றும் காலஞ்சென்ற லார்ட் பர்க்கன்ஹேட் (Lord Birkenhead) அவர்களும், இப்போதுள்ள லார்ட் பக்மாஸ்டர் (Lord Buckmaster) முதலியவர்களும் அபிப்பிராயப் படுகின்றனர். டாக்டர் கேய்க்கீ காப் (Dr. Geikie Coff) என்னும் மதாச்சாரியார் ஒருவர் (December 1928) இங்கிலீஷ் ரிவ்யூ (The English Review) என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகின்றூர் "அவசரமாக நடத்தப்பட்ட ஒரு திருமணமானது பாழ்பட்டு விடுமேல் மறுமுறை அத்தம்பதிகள் நல்லதொரு கலியாணம் செய்து கொள்ளக் கட்டாயம் ஒரு வழி இருத்தல் வேண்டும். அனுபவத்தின்படி நாம் காண்பதென்னவென்றுல், இரண்டாவது கலியாணமானது முதல் மணத்தைவிடப் பன்மடங்கு சுகமும், மேன்மையும் பயப்பதாகவே விருக்கின்றது. பயங்காளிகள் பலர் ஒழுக்கக்குறைவானது, மறு மணம் புரிதலினுல் ஏற்பட்டு விடுமே என்று அஞ்ச வேண்டிய அவசியமில்லை. ஸ்காத்லாண்டு தேசத்திலும், ஸ்காண்டினேவியன் தேசங்களிலும் வழங்கிவந்த மணரத்துச் சட்டங்களின் சரித்திரத்தைப்பார்க்கின், 'கடவுளின்' அருளாட்சியைக் கவனியாமலும், வரும் காலத்திலும், மக்களின் உடன் பிறந்த நல்லியற்கையிலும் நம்பிக்கையற்றும், ஏனைய மக்களை வீணுகக் கட்டுப்படுத்த விரும்பும் வீணர்களின் வார்த்தைகளின் பொய் தெள்ளிதின் விளங்கும். கேடுற்ற மணம் ஒருக்காலும் உண்மையான மணமாகாது. கத்தோலியர்களது மணத்தின் கெடுதிகளைச் சற்று நோக்கின், அம்மணம் சற்றேனும் ஆன்மாவின் சுதந்திரத்திற்கு ஒட்டியதாக வில்லாதிருப்தன்னியில், மனிதனின் கல் மனத்திற்கே ஒரு சாட்சியாகவும் இருப்பது போல் விளங்குகின்றது." இக்கூற்றை

மேனாட்டாரே யன்றி, நம் நாட்டு மக்களும் விசேஷ மாகக் கண்டு கருத வேண்டியது மிகவும் அவசியமாகும். ஸ்பெயின் தேசத்தில் ரோமன் கத்தோலிய மதம் தலையோங்கி நின்ற காரணத்தால் அங்கு விவாக ரத்துச் சட்டம் சில நாட்களுக்கு முன் வரை இல்லாமலிருந்தது. ஆனால், சிலநாட்களுக்குமுன் அத்தேசத்தில் இப்போது நடந்துவரும் ஒரு பெரிய அரசியல் புரட்சியின் காரணத் தால் மதத்தின் மகிமையும் மாண்பும் பறந்தோடியதன்றி இதுகாறும் வழங்கிவந்த மணவிடுபடாமை என்னும் உய ரிய மதக்கொள்கையும் அடியோடு தாக்கப்பட்டு அழிக் கப்பட்டுவிட்டது. ஏனைய தேசங்களைப் போன்றே ஸ்பெயின் தேசத்திலும் இப்போது மக்கள் தம்மண தை ரத்துசெய்து கொள்ளப் புதிதாகவோர் மணரத்துச் சட்டம் தற்கால அரசியல் அதிகாரிகளால் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இச்செய்தியைக் கேட்க நாமும் நம் போன்ற சீர்திருத்த வாதிகளும் அளவிலா ஆனந்தம் அடைவ தன்னியில், இதுநாள் வரைக்கும் நம் இந்தியாவைப் போன்றே 'மதம்' என்னும் கொடுங்கோன் மன்னனால் 'சட்டம்' என்னும் கெட்டதோர் படைகொண்டு நெடு நாள் ஆளப்பட்டு வந்த ரோமன் கத்தோலிய தேசமாகிய ஸ்பெயினிலும் கூட, நாம் ஓயாது வேண்டும் என்று ஓலமிட்டலறும் சீர்திருத்தச்சட்டமாகிய விவாகரத்துச் சட்டம் உண்டாக்கப்பட்டு விட்டதென்றால், அதே போன்ற நிலையிலிருந்த நம் நாட்டிலும் ஏன் அவ்வுயரிய சட்டம் உண்டுபண்ணல் ஆகாதென ஏங்குகின்றோம்! இந்து மதத்தின் எண்ணருங் கோட்டைகளுள் ஒன்றா கிய பரோடா தேசத்திலும், ரோமன் கத்தோலிய மதத்திற்கு அநேக நூற்றாண்டுகளாய் அடிப்படையும் ஆதரவுமாய் இருந்து வந்த ஸ்பெயின் தேசத்திலும் விவாக விடுதலை இப்போது தோன்றிவிட்டதானால், ஏனைய பல விஷயங்களில் இந்து மதத்தைச் சற்றும் ஏலாது அதன் உண்மைக்கொள்கைகளுக்கே நேர்மாறா கவும் செல்லக்கூடிய நம்பிரிட்டிஷ் இந்திய தேசமானது,

'மதம்' 'ஒழுக்கம்' என்ற பதங்களை மட்டும் கொண்டு, இ த ம ற் ற வீண்மொழிபேசிப்பிதற்றி விவாகரத்து வேண்டாமென்று விளம்பல் நம் மனிதவர்க்கத்திற்கே ஓர் சொல்லரும் வியப்பையேயன்னியில் வெட்கத்தையும் உண்டாக்கக் கூடியதோர் விஷயமாகும்!

இதுவரைக்கும் நாம் ஐரோப்பிய தேசங்களைப் பற்றியும் அவைகளில் வழங்கிவரும் விவாகரத்து முறைகளைப்பற்றியும் வெகு சுருக்கமாய்க் கண்டுவந்தோம். இனி ஆசியாக்கண்டத்தைப் பற்றியும் சிறிது காண்போம். மிகவும் பெரிய பரப்பளவையும் ஜனத்தொகையையும் கொண்ட சைனு தேசத்தில் எவ்வளவு தூரம் விவாக ரத்து முறை வழங்கப்பட்டு வருகின்றதென்னும் விஷயம் நமக்குச்சரிவரத் தெரியவில்லை. புத்தமதத்தைக் கையாளும் ஜப்பான் தேசத்தில் மணரத்து வழங்கிவருவதால் சீனுவிலும் அது ஒரு விதமாக வழங்கிவருகின்றது. ஆனுல், மேனுட்டு நாகரீகம் மிகுந்த ஜப்பானைப்போல், பிற்போக்கான சீனுவில் அவ்வளவு தூரம் அது வழங்க இடமிராது. அத்தேசத்திலிருக்கும் அரசியல் நிலைசீர்குலைந்த நிலைமையில் இருப்பதால் விவாஹரத்து முறையைப்பற்றியும், அதன் புள்ளி விபரங்களைப்பற்றியும் நாம் அறிவதற்குத் தக்க வசதிகள் கிடையா.

ஆனுல், ஜப்பான் தேசத்தில் விவாகரத்து முறை மிக அதிகமாகக் கையாளப்பட்டு வருகின்றது. அம்முறையின் சரித்திரத்தைப்பற்றி இங்கு நாம் ஆராய வேண்டிய அவசியம் இல்லை. 1930 வருடத்தில் நடந்த விவாஹரத்தின் புள்ளி விவரங்களைப்பற்றி ஜப்பான் தேசத்தின் அரசாங்கத்தைச் சேர்ந்த புள்ளி விவர நிலையம் (Statistics Bureau) ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதைப்படிப்போருக்கு ஜப்பான் தேச மணரத்தின் விஷயங்கள் நன்குவிளங்கும். அவ்வறிக்கை

யின்படி 1930வது ஆண்டில் அளிக்கப்பட்ட விவாக விடுதலைகளின் எண்ணிக்கை 51,222 ஆகும். இது அவ்வாண்டில் நடந்த திருமணங்களின் எண்ணிக்கையில் 100க்கு 10 வீதம் ஆகின்றது. இதில் மற்றொரு விஷயம் நாம் கவனிக்கத்தக்கது என்னவென்றால் சட்டமூலமாகப் பெறப்பட்ட விவாகரத்துக்களின் எண்ணிக்கை 439 எஞ்சிய 50,783 ரத்துக்களும் தம்பதிகளுக்குள்ளேயே ஒப்பந்தத்தின்படி செய்யப்பட்டுள்ளன.

மற்றும் 44,239 ரத்துகளில் மனைவியர்களே முற்பட்டு மணரதது செய்துகொண்டு குடும்பத்தினின்றும் வேறுபட்டனர். 5564 ரத்துக்களில், கணவர்கள் முற்பட்டு தம் மனைவியாரை விட்டேகினர். எஞ்சிய 1419 தம்பதிகள் ரத்துசெய்தபின்னும் ஒரே குடும்பத்திலேயே இருந்தனர். இதிலிருந்து நாம் கவனிக்கவும் கருதவும் கிடக்கும் விஷயங்கள் மூன்று. அவையாவன, மிகவும் அதிகமான எண்ணிக்கையையுடைய மனைவியர்கள் தாமே முற்பட்டு ரத்துசெய்துகொள்ளுதலால், கணவர்கள் தம் மனைவியரை நடத்தும் முறை அவ்வளவு சிறந்ததும் நற்குணமுடையதும் அல்ல வென்பது ஒன்று. கணவர்கள் தாமாகவே பெற்ற ரத்துக்கள் சிறிய தொகையனவாகலின், மனைவியர்கள் தம் கணவர்களுக்குப் பெரும்பாலும் உண்மையாகவும், நல்லவிதமாகவும் நடந்துகொள்ளுகின்றனர் என்பதும், அது காரணத்தால்தான் கணவர்கள் தாம் கொண்ட பெண்கள் (தாம் என்ன செய்யினும்) பொருமையுடையவர்களாயிருத்தலால் அவர்களினின்றும் பிரிய மனமில்லாதவர்களாய் இருக்கின்றார்கள் என்பது. மூன்றாவது, அந்த தேசத்தில் மற்றவிடங்களிற்போலவே ஒரு எண்ணிக்கையினர் தம் மணத்தை ரத்துசெய்துகொண்டாலும் அதே குடும்பத்தில் மறுமணம் இன்றி இருந்து தம் வாழ்நாளைக்கழிக்கும் இயல்பினர் உண்டு என்பது.

திருமணம் நடந்து ஒரு ஆண்டிற்குள்ளாகப் பெறப்பட்ட ரத்துக்களின் தொகை 7478, இரண்டு வருடங்களுக்குள் பெறப்பட்டது 8010, மூன்று வருடங்களுக்குள் பெற்றவை 6026. இதே போன்று வருடங்கள் அதிகரிக்க அதிகரிக்க, பெறப்பட்ட ரத்துக்களின் தொகை குறைந்து கொண்டே போகின்றது. விவாஹ ரத்து பெற்ற தம்பதிகளின் வயதைப்பற்றியும் சில ஆச்சரியமான விஷயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. விவாக ரத்துப்பெற்ற தம்பதிகளில் 25-லிருந்து 29 வயதுக்குட்பட்ட ஆண்பாலாரின் தொகை 14,740 இவ்வாறு ஆண்களுள் வயது மேற்படப்பட ரத்துப்பெறும் ஆண்களின் தொகை குறைந்து கொண்டே வருகின்றது. இது போல், 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெறும் ரத்துகள் 3210, 60 வயதுக்கு மேற்பட்டவர்பெறும் ரத்துக்கள் 1313, மற்றும் ஆண்களுள் 20 வயதுக்குட்பட்டவர் கொள்ளும் ரத்துக்களின் தொகை மிகமிகக் குறைந்தது, அது 425. ஆனால் அதே வயதில் பெண்கள் கொண்ட ரத்துக்களின் தொகை 3863. 25-லிருந்து 29 வயது வரைக்கும் உள்ள தம்பதிகளுள் விவாகரத்து பெறும் ஆண்களின் தொகையும், பெண்களின் தொகையும் ஏறக்குறைய சமமாக விருக்கிறது. ஆனால் 30 வயதிலிருந்து 60 வயது வரைக்கும் உள்ளவர்கள் பெறும் ரத்துக்களில் ஆண்களின் தொகையைக் காட்டிலும் பெண்களின் தொகை மிக மிகக் குறைந்துகொண்டே போகிறது. மற்றும் இதில் நாம் அவசியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், 20 வயதிலிருந்து 24 வயது வரைக்கும் உள்ள பெண்கள் பெற்ற ரத்துக்கள்தான் மிகவும் அதிகமாகிய 15,248 எண்ணிக்கையை யுடையதாகும். இதே வயதுடைய ஆண்களின் தொகையாகிய 6571ஐக் காட்டிலும் பெண்களின் தொகை இரண்டரைப் பங்கு அதிகம். இத்தகைய புள்ளிகள் வசிப்பதற்கு இன்பம் அளிக்கக்கூடாத நிலைமையிலிருப்பினும் இதைப் பற்றி ஊன்றி யாராய்பவருக்கு விவாகரத்தின் உண்மை

யான தன்மை நன்கு தெள்ளிதின் விளங்குமாதலால், இவைகளைச்சற்று அதிகமாக நாம்இங்கு எழுதியதற்காக வருந்தாமல் இவைகளைப்பற்றிச்சிந்தித்துத் தெளியுமாறு நாம் நம்நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இறுதியாக ஜப்பானைப் பொறுத்தமட்டில் நாம் கூறக்கிடப்பது என்னவென்றால் தற்காலம் அத்தேசத்தில் வரவர பெறப்படும் விவாகரத்துக்களின் தொகை குறையும் போக்கில் இருந்து வருகின்றது. ஏனெனில் 1879-வது ஆண்டுவரைக்கும் ஒவ்வொரு வருடமும் அளிக்கப்பட்ட ரத்துக்களின் தொகை ஒருலக்ஷத்திற்கு மேற்பட்டதாயிருந்து வந்தது. இப்பொழுது அது மிகவும் குறைந்து வருகின்றது. 1929 வருடம் பதிவுசெய்த ரத்துக்களின் தொகை எல்லா வருடங்களின் தொகையினும் மிகவும் குறைந்தது. ஆனால் பதிவு செய்யப்படாத மணங்களும், ரத்துக்களும் இப்பொழுது அதிகப்பட்டு வருவதும் உண்மையாதலால் அவ்வாறு நடக்கும் ரத்துக்களின் தொகையைப் புள்ளி விவரத்துடன் அறிய இயலவில்லை.

மற்றைய தேசங்களாகிய ஆப்கானிஸ்தான், பெலுசிஸ்தான் முதலியவைகளில் அங்குவழங்கும் முகம்மதிய மதத்தின் (தலாக்) விவாகரத்து உண்டு என்பது யாவரும் அறிந்ததே. பெர்ஷியா தேசமும் அவ்வாறே யாகும். மற்றும் அரேபியா தேசத்திலும் விவாகரத்து உண்டு. கடைசியாக, ரஷியா தேசத்தில் விவாகரத்து உண்டு என்னும் விஷயமே யன்றி, உலகத்திலிருக்கும் விவாகரத்து முறைகளில் எல்லாம் நெகிழ்ச்சியான வகையில் அது கையாளப்பட்டு வருகிறது என்னும் விஷயமும் ஒவ்வொருவருக்கும் தெரியும். 1917-வது ஆண்டில் நடந்ததோர் வியப்பின் புரட்சியிலிருந்து ரஷியா தேசத்தில் பழையன அனைத்தும் கழிந்து புதியன பலபல புகுந்து வழுவுறும் வகையிலும்கூட நடந்து வருகின்றன. உண்ணும் விஷயத்திலிருந்து 'மதம்' வரைக்கும் பழைய முறைகள் எல்லாம் அழிக்கப்பட்ட இந்நாட்டில், சீர்திருத்தமென்னும் மோகம் மனிதவியற்கைக்கு மாறாகவும்

கூடப் பொருளாதார முறையிலும் சமூக முறையிலும் பற்பல நூதன முறைகளைப் புகுத்த தூண்டிக்கொண்டிருக்கும் இந்நாட்டில், 'மதம்' என்னும் வார்த்தையையே மனம், வாய் இவைகளினின்றும் மறைப்பித்து, கோவில்கள் என்னும் கோட்டைகளைத் தாவிப்பிடித்துத் தகர்த்தெரிந்து, குருக்கள் என்னும் கூட்டத்தாரின் குலங்கள் தம்மை வேரறுத்து, சமய நூல்களைத்தீயிட்டும் சாஸ்திரங்களைக்கடல்வாயிட்டும், நம்பிக்கைகளை நாசமாக்கி நாளும் தலைப்படாது நலிவுறுத்தி, கும்பிட்டு வந்த தெய்வங்களையும் குணங்கள் நிறைந்த குருமார்களையும், அம்பிட்டுக்கொன்று அகற்றிய வீரம்ததும்பி நின்று தத்தளிக்கும் ரஷியாவாகிய இந்நாட்டில், விவாகவிடுதலை வழங்கிவருகிறது நம் போன்றவருக்கு ஒருக்காலும் இறும்பூது பயக்கும் இயல்பினது ஆகாது! அஃதா, அன்று. எண்ணிய எண்ணியாங்கு எவரும் மணம் இயற்றுதற்கும், அம்மணம் தம்மனம் விரும்பிற்று இன்றேல் மறு நிமிடமே அக்கட்டினை இக்கட்டின்றி அறுத்தெரியவும் ரஷிய தேசமக்களுக்குச் சுதந்திரம் உண்டு. இந்நிமிடம் ஓர்மணம் இயற்றிப்பதிவுசெய்து, அம்மணம் நிகழ்த்திய மகிழ்வும் மனத்தினின்று மாறுதிருக்கும் மறுநிமிடமே அம்மணத்தை ரத்துசெய்துகொள்வதும் வெகு சகஜம் என அந்நாட்டினையறிந்தோர் அரைகின்றனர். இத்தகைய நிலை அந்நாட்டின் மக்கள் பொதுவாகப் பெற்றுள்ள சுதந்திரத்திற்கும், சுயேச்சைக்கும், அந்நாட்டின் பெண்டிர் சிறப்பாகப்பெற்றுள்ள சீருக்கும் ஒவ்வியதாயிருப்பினும், பிற நாட்டினர் இதைக்கண்டு மனம்பதைத்து நடுங்குகின்றனர். இவ்வாறு மனம்போன போக்கெல்லாம் மணம்போகவேண்டும் என்று நாம் ஒருக்காலும் கூற முன் வரவில்லை. மற்றும் ரஷியா தேசத்திலிருக்கும் இத்தீவிரமான விவாகவிடுதலை முறையை நம் தேசத்தில் புகுத்தவேண்டுமெனவும் நாம் புகலவுமில்லை. ரஷியாவிலிருக்கும் விவாகரத்து முறை நன்மை பயக்கும் என்று சிலர் எவ்வளவு கருதினாலும், நம்மைப்பொ

ருத்த மட்டில் நாம் அதைப்பற்றி அதிக மகிழ்ச்சியுடன் பாராட்டவோ, அதை நாமும் பின்பற்றவேண்டுமென்று கூறவோ முடியாது. ஏனெனின் 'அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு' என்ற தமிழ்ப்பழமொழிக்கு நேரான லத்தீன் பழமொழி (Summum jus summa injuria) யில் நமக்கு நம்பிக்கையுண்டு. சமூகக்கட்டு பாட்டை நிலை நிறுத்துவதில் நாம் மதவாதிக்குச் சற்றும் பின் தாங்கியவரல்லோம். ஆனுல் நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய பேரரும் ரகசியம் ஒன்று உள்ளது என்பதைமட்டும் நாம் நம் நாட்டுமக்களுக்கு அறிவுறுத்த அவாவுகின்ருேம். சீர்திருத்தம் என்பது ஓர் வெள்ளத்தைப் போன்றதாகும். தென்னிசைப் புலவர் [Lord Tennyson] பாடிய 'அருவி' என்னும் பாடலில் 'மக்கள் வரலாம் மக்கள் ஏகலாம் எக்காலும் நான் ஏகாநிற்பன்" [Men may come and men may go, But I go on for ever] என்று அவ்வருவி வெள்ளம் கூறுவதைப் போல் பாடும் இயல்புடையது 'சீர்திருத்தம்' என்பது அவ்வாறு மனிதன் விரும்பினும் விரும்பாவிடினும் இன்றியமையாதும், அடக்கமுடியாதும் வரும் பாற்றதாம் புதியது. அவ்வாறு 'பழையன கழிந்து புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே' என்றும் கூறியுள்ளார், பவணந்தி முனிவர். இவ்வாறு நம் முயற்சியில்லாமலும் வரக்கூடிய இச்சீர்திருத்தத்தை ஒரு தேசத்து மக்கள் எவ்வளவுதூரம் தம் அறிவையும், அனுபவத்தையும் துணைக்கொண்டு சீர்படுத்தி உபயோகப்படுத்திக் கொள்ளுகின்ருர்களோ அவ்வளவுக்கு அவர்கள், அவ்வாறு செய்யமுடியாது, மடமைக் குன்றிலிருந்து மதக்கள் பருகிவாளாவிருந்து வீண் வருத்தம் அடையும் மற்ருெரு தேச மக்களைக்காட்டிலும் மேற்பட்டவர் ஆவர். விவாகரத்து என்னும் சீர்திருத்தம் கிறிஸ்துவ தேசங்களைப்பொருத்த மட்டில் ஏறக்குறைய முதன் முதலில் கையாளப்பட்ட தேசங்களில் இங்கிலாந்து ஒன்று. அவ்வாறு அச்சீர்திருத்தத்தின் நன்மையையுமே யன்றி இன்றியமையாமையையும் நன்குணர்ந்து அதையணிவகுத்து சமூகத்தில்

ஏற்றுக்கொண்ட இங்கிலாந்து முதலிய தேசங்களில் விவாகரத்து முறை, ரஷியாவைப்போலில்லாமலும் அளவுக்கு மீருமலும், இன்றும் இருந்து வருகின்றது. இதற்குக்காரணம் தக்ககாலத்தில் தக்கவகையில் இம்முறையைக் கையாண்டதேயாகும். ஆனல் கிறிஸ்துவமதம் பரவிய நாள் தொட்டு 1917-வது ஆண்டுவரை இயல்பாகவே வரும் சீர்திருத்தங்களைப் புகுத்தாமல் ஒவ்வொன்றையும் எதிர்த்தும் விலக்கியும் வந்த ரஷியாதேசத்தில் புரட்சிக்குப் பின் திடீரென இவ்விவாகரத்தைப் புகுத்தவே அது நெடுநாள் கட்டுண்டிருந்து அந்நாட்டு மக்கள் மனத்தை வெகு வேகமாய் இழுத்துச் சீர் குலைக்க ஏதுவாயிற்று. விவாகரத்துச் சீர்திருத்தமாகிய இப்பெரும் வெள்ளத்தை இது நாள்வரை அடைத்து வைத்திருந்த பேரரும் அணையாகிய 'மதம்' திடீரென்று நீக்கப்பட்டவுடனே அவ்வெள்ளம் எண்ணரும் வேகத்துடன் குபீரென்று பாய்ந்து நாட்டைக்கெடுத்துவிட்டது. இத்தகைய காட்சி மிகவும் இயல்பே; இது ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியதும் அன்று. இதேபோன்று நெடுநாள் தாமதிக்கப்பட்டு நேற்றுப் புகுத்திய இவ்விவாகரத்து முறை ஸ்பெயின் தேசத்திலும் ரஷியாவைப்போலவே அதி தீவிரமாகக் கையாளப்பட நேருமாயின் நாம் அதைக் கண்டு ஆச்சரியப்படோம். ஆக நாம் இதுகாறும் கூறி வந்த காரணக்கூற்றையும் சரித்திர சாக்ஷியங்களையும் கேட்டும்கூட விவாகரத்தின் இன்றியமையாமையை இன்னும் உணராத நம் தேச நேயர்கள், அவர் தம் கண்கூடாகக் காணும் இத்தகைய விபரீதக் காக்ஷிகளைக் கண்டேனும் நம் நாட்டை அத்தகைய நிலைமைக்குக் கொண்டு செல்லாதபடி, இங்கிலாந்து முதலிய நாடுகளைப்போல் தக்க காலத்தில் மெதுவாக இச்சீர்திருத்தத்தைச்செய்ய முற்படுவார்கள் என நாம் முற்றிலும் நம்புகின்ருேம். காலத்தைக்கண்டு செய்யாராயின் எக்கருமமும் அது நம் கோலத்தைக் குலைக்கும் தன்மைய தாம் என்னும் உயரிய உண்மையை உணர்வோமாக.

அமேரிக்காவும், விவாஹரத்தும்

ஐரோப்பிய தேசங்களின் விவாகரத்து முறைகளை யும், ஆசியாவிலுள்ள சில தேசங்களின் விவாகரத்து முறைகளையும் இதுவரைக்கும் சுருக்கமாகக் கண்டுவந்த நாம் இனி காணவும், கருதவும் எஞ்சி நிற்பது அமெ ரிக்கா தேசமும் அதில் வழங்கிவரும் விவாக விடுதலை முறைகளுமேயாகும். மேலே நாம் கூறியபடி 'விவாக ரத்து' என்ற மாத்திரத்தில் அம்முறை வெகு தீவிரமாக வும் வெகு கேவலமாகவும் வழங்கிவரும் அமெரிக்கா தேசத்தைச் சுட்டிக்காட்டுவதன்னியில், ஆங்கு சொல் லொணுத இழுக்குகளும் ஒழுக்க இழிவுகளும் ஏற்படுவ தால் அத்தகைய தீமை பயக்கும் விவாகரத்தையே நம் இந்து சமூகத்தினர் கையாளுதல் தகாதெனவும் கூறு கின்றனர் பலர். ஆனல் இதில் நாம் உற்று நோக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. உலகத்தினுள் எவ்வ ளவோ தேசங்கள் இவ்விவாக விடுதலைச் சட்டத்தைக் கையாண்டு வந்துகொண்டிருப்ப, மக்கள் அமெரிக்கா தேசத்தைமட்டும் சுட்டி அங்கு அச்சட்டத்தால் மற் றெத்தேசத்தினும் காண்பரிய ஒழுக்கக்குறைவு ஏற்பட ஏதுவாகின்றது என்று கூறுவாரேல் இதில் அமெரிக்கா வைப் பொறுத்தமட்டில் இதற்குச்சில தனிப்பட்ட கார ணங்கள் இருத்தல்வேண்டும் என நமக்குத் தெள்ளிதின் விளங்கவில்லையா? மீண்டும் ஒரு முறை தேசத்திற்கு தேசம் காலத்திற்குக்காலம் விவாகரத்துமுறை வேறு படும் என விளம்புதற்கவசியம் இன்றென எண்ணுகின் ருேம். ஆகவே நாம், அவ்வாறு அமெரிக்கா தேசத்தைச் சார்ந்தன என்று கூறப்படும் தனிப்பட்ட காரணங்கள் யாவை எனவும், அத்தகைய காரணங்கள் நம் இந்திய நாட்டில் இருக்க ஏது இல்லாமையால் அமெரிக்காவிற் காணும் மணக்குலைவாகும் காட்சிகள் இங்கு நேருவ தற்கு இடமில்லை எனவும் நம் நேயர்கட்குக்காட்ட முற் படுவோம்.

முதன் முதலில் அமெரிக்கர்களைப்பற்றியும் அவர்களின் சமூக அமைப்பு நிலைமையைப்பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் கூறுதல் இன்றியமையாததாகும். ஆனால் உண்மையாகவே அவைகளைப்பற்றி நாம் கூற முற்படுவதில் திருமதி மேயோ என்னும் அந்நாட்டுப் பெண் நம் வயின் எண்ணியதைப்போல அத்தேச மக்களின்மீது விஷமப் பிரசாரம் செய்யவேண்டும் என்ற எண்ணம் நம்மிடம் சிறிதும் இல்லை எனவும் உறுதி கூறுவாம். மற்றும் நாம் இங்கு அமெரிக்கா தேசத்தைச்சார்ந்த மக்கள் - பத்திரிகை - இவர்கள் கூற்றையே எடுத்துக் காட்டுகிறோமேயொழிய நாமாக ஒன்றும் எழுதவில்லை. தற்காலம் அமெரிக்கா தேசத்தில் அளவுகடந்த குற்றங்களும், சட்டங்களை மீறி நடத்தலும் அதிகரித்துக் கொண்டுவரும் விஷயம் அனைவரும் அறிந்ததே. இதைக்கண்ட பிரஸிடெண்ட் ஹூவர் (President Hoover) திரு. விக்கர்ஷாம் (Mr. Wickersham) என்பவர் தலைமையில் ஒரு கமிஷனை நியமித்தார். அக்கமிஷன் இப்பொழுது தமது அரிய அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் அமெரிக்கர்கள் சட்டவரம்பு மீறி நடப்பதற்கும், குற்றம் புரிவதற்கும் ஏற்பட்ட பல காரணங்களைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அத்தேச சமூகத்தில் சட்டவரம்பு என்பதை அசட்டை செய்யும் குணம் கற்றவர், கல்லாதவர், பணக்காரர், ஏழை முதலியவரிடமும் வெகு சாதாரணமான பழக்கமாகவும், இயல்பாகவும் ஆகிவிட்டது எனக் கூறப்படுகின்றது. இக்காட்சியைக் கண்ணுற்ற நியூ ப்ரீமன் (The New Freeman) என்னும் ஒரு அமெரிக்கப் பத்திரிகை பின்வருமாறு கூறுகின்றது. 'அமெரிக்கர்களது குற்றங்கள் என்னும் பிரச்சினை அத்தேசத்தின் சமூக நிலையையொட்டியதோர் பிரச்சினையாகும். அமெரிக்கா தேசமானது தான் தோன்றிய நாள் தொட்டு சிறிதும் சட்டத்திற்குக் கட்டுப்படாத தேசமாக இருந்து வந்திருக்கின்றது. காடுமலைகளில் வழிகாட்டியாக முதன் முதல் சல்பவன் சட்டவரம்பிற்குட்பட்டவனுதல் முடியாது.

ஒரு பெரிய கண்டத்தைக் கைப்பற்றி ஆங்குள்ள மக்களை அடக்கியழித்தல் சட்டக்கட்டுக் கடங்காத சுயேச்சை வாழ்வை வளர்க்குந் தன்மை யதாயிற்று; ஆகவே அவ் வெள்ளையர், கொள்ளையடித்தலை யொருகலை யெனக் கற்றனர். வழிகாட்டிகள் சட்டங்களைப் பெரும் இடைஞ்சல்களாகவே எண்ணினர். ஆகவே சட்டமீறுந் தன்மையானது அமெரிக்கர்களது வாழ்வில் மிகவும் இயல்பாக ஏற்பட்டு அவர் தம் எலும்பிலொட்டிய நோய் போல் வந்துள்ளது. முதலாளித்துவம் சட்டத்தையும் நியாயத்தையும் அழித்தேதான் வளரமுடியும்; சட்டத்திற்கு விரோதமான குற்றங்களாலன்றி அது பெருக முடியாது. அதிலும் அமெரிக்கா தேசத்து முதலாளி ஆதிக்கத்தை நிலைநாட்டிய மக்களைக் காட்டினும் குற்றம் புரிந்தோர் மற்றெந்த நாட்டிலும் இல்லை.” ஆகவே பொதுவாகவே எத்தன்மையான சட்டங்கள் தம் நாட்டில் இருந்தாலும் அவைகளைப் பின்பற்ருமல் மீறி நடந்து குற்றங்கள் புரிவதே அமெரிக்கா தேச மக்களின் பிறவிக்குணமும் மிக இயல்பான தன்மையுமென அந்நாட்டு அறிஞர் வாய்ப்பட்டே யறிந்தோம். குடிமறுப்புச் சட்டம் பல்லாண்டுகளாய் இருந்தும் அதற்குவிரோதமாகப் போட்டிபோட்டுக் குடிக்கும் தேசம் அமெரிக்கா என்பதை யுணர்ந்தவர்க்கு மேலே கூறியவை யாவும் வியப்பைத்தாராவென நம்புகின்ரேம்.

எனவே, நன்மை பயக்கும் சட்டங்களாயினும் அவைகளையே சட்டைசெய்யாது அவைகட்கு மாருக நடந்து குற்றம் புரியும் குணமுடைய அமெரிக்கர்கள், இயல்பாகவே தீயவைசெய்ய இடம்பயக்கும் சட்டம் ஏற்பட்டால் எவ்வளவுதூரம் அவைகளால் ஒழுக்கத்தைக் காப்பாற்றும் நிலைமையில் இருப்பார்களென நம் நேயர்களே யூகித்துணரட்டும். விக்கர்ஷாம் கமிஷன் அங்கத்தினர் ஒருவர் கூறுவதைப்போல “அமெரிக்கா தேசத்தினர் மிகப்பெரிய எண்ணிக்கையுடைய பல சட்டங்களைச்செய்து வந்துள்ளார்கள். அச்சட்டங்கள் மக்களின்

வாழ்க்கையையும் நடத்தையையும் கட்டுப்படுத்தி கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டிருப்பினும் ஒவ்வொரு நாளும் அத்தேச மக்களிடம் சட்டவரம்பு மீறலும், குற்றங்கள் புரிவதுமான பழக்கம் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது."

இப்பொழுது அமெரிக்கா விவாகரத்துச் சட்டம் (அல்லது சட்டங்கள்) மிகவும் விரும்பத்தக்க முறையில் இல்லை என்று நாம் கூறவேண்டிய அவசியம் இல்லை. அவை அவ்வாறிருக்ககாரணங்கள் பல உண்டு. அதில் முக்கியமானது என்னவென்ருல் இவ்விவாகம் முதலிய விஷயங்கள் முக்கிய (ஐக்கிய) அரசாங்கத்தாலன்றி அத்தேசத்திலுள்ள பலவேறு (States) மாகாண அரசாங்கத்தால் கையாளப்பட்டு வருவதே யாகும். 1776-வது ஆண்டில்பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்துவிலகிய காலத்தில்பதின்மூன்று குடியேற்ற நாடுகளும் அப்பொழுது இங்கிலாந்தில் வழங்கிவந்த சட்டங்களுடன் ஆரம்பித்தன. அப்பொழுது விவாகத்தை ரத்துசெய்துகொள்ள யாதொரு வழியும் இல்லை. ஆனல் பல மாகாணங்களும் புதிதாக இவ்விஷயத்தில் எண்ணிறந்த பல சட்டங்கள் ஏற்படுத்த முயன்றன. அவையனைத்தும் மற்றெந்த நாட்டிலும் காண்பரியதாக விசனிக்கத்தக்கவையும் விபரீதமானவையுமான தன்மையன வாகும் என்று லார்ட் ப்ரைஸ் (Lord Bryce) என்பவர் கூறுகின்ருர். முதன் முதலில் இங்கிலாந்தைப்போலவே ஒவ்வொரு மாகாண சட்டசபையிலும் ஒரு விவாகரத்துப் பிரேரேபணை செய்ய வேண்டியதாயிருந்தது. ஆனல் சீக்கிரம் இம்முறையின் தீமைகள் புலப்படவே இது கைவிடப்பட்டு, மணரத்து அளிப்பதற்கெனவே தனியாக நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே இப்போதிருக்கும் நாற்பத்தைந்து தொகையுடைய மாகாணங்களிலும் ஏறக்குறைய நாற்பத்தைந்து வகையான மணரத்து முறைகள் வழங்கி வருகின்றன. அமெரிக்கா தேசம் முழுவதிற்கும் ஒரே விதமான விவாகரத்து முறை இல்லை. ஒரு மாகா

ணத்துச் சட்டத்திற்கும் மற்றொன்றின் சட்டத்திற்கும் பல வேறுபாடுகள் உண்டு. இத்தகைய நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதே. ஏனெனின் இது காரணத்தால் தான் பெருங் குழப்பமும், அடக்கமுடியாத ஒழுக்கமில் நடத்தையும் ஏற்படுகின்றன. ஏனைய தேசங்களிற் போல ஒரே சட்டம் அமெரிக்கா முழுவதுக்கும் இருக்குமேல் இப்பொழுதுள்ள அளவு தீமைகள் விளைய இடமில்லை எனத்திண்ணமாய்க் கூறலாம். மற்றும் இதே காரணத்தால் தான், மிகவும் அற்பமான காரணத்திற்கு மணரத்து அளிக்கும் சட்டம் கொண்ட மாகாணத்திலிருந்து மண ரத்தே முற்றிலும் இல்லாத மாகாணமும் அமெரிக்காவில் உண்டு. உதாரணமாக தென் கெரோலீனு (South Carolina) என்னும் நாட்டில் விவாகரத்தே கிடையாது. இதில் இன்னும் என்ன விசேஷம் என்றால் அங்நாட்டில் உள்ள மக்களிற் பெரும்பாலோர் பிராடஸ்டண்டு (மணரத்தை யனுமதிக்கும்) மதத்தினர்; மிகச் சிலரே ரோமன் கத்தோலியர்.

இரண்டாவது, அமெரிக்காவிலுள்ள பல மாகாணங்களிலும் விவாகரத்து அளிக்கப்படுவதின் காரணங்கள் பல வகையினவாகும். நியூயார்க் மாகாணத்தில் வழங்கும் ஆதி சோரம் என்னும் காரணத்திலிருந்து வாஷிங்டன் நாட்டில் வழங்கும்படியான மிகவும் அற்பமான காரணம் வரைக்கும் இருக்கின்றன. அங்நாட்டில், நீதிபதி மனத்திற்கு இருதம்பதிகள் இனிச் சேர்ந்துவாழார், அவர் பிரிந்திருப்பதே நலம் என்று தோன்றின் அவர் ரத்தை அளிக்கலாம் என உள்ளது. பொதுவாகக் கூறுமிடத்து எல்லா மாகாணங்களிலும் மனைவியைவிட்டு வேறிடம் புகுதல் விவாகத்தை ரத்துசெய்து கொள்வதற்குத் தகுந்த காரணம் ஆகும். இரு தம்பதிகளுள் யாராவது ஒருவரேனும் கொடூர நடத்தையுடையவராயிருந்து மற்றவரைக் கொடூரமாக நடத்தினும் அல்லது அவ்வாறு ஒருவர் மற்றொருவரால் நடத்தப்பட எதுவுண்டு என உண்மையாகப்பயந்தாலும் அவர்கள் மணம்

ரத்து செய்யப்படும். இதே விதமாகப் பல மாகாணங்களில், கணவன் தன் மனைவியைப் போஷிக்கவும், காப்பாற்றவும் தவறினாலும், வழக்கமாகக் குடித்துக் கொண்டேவந்தாலும், கேவலமாகவும் அவமரியாதையாகவும் தன் மனைவியை நடத்திவந்தாலும், கடுங்கோபியாக விருந்து எப்போதும் சீறி விழுந்து கொண்டே இருந்தாலும், திருமணத்திற்கு முன்னர் ஒருவருக்கொருவர் தெரியாதபடி இழி நடத்தையுடையவராயிருந்தாலும், தம்பதிகளுள் யாரேனும் ஒருவர் பைத்தியம் கொண்டுவிட்டாலும், யாரேனும் ஒருவர் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு எங்கேனும் ஓடிவிட்டாலும், அல்லது நாடோடியாய்த் திரிந்து வந்தாலும், மனைவியானவள் தன் வீட்டு வேலைகளைச் சரிவரக் கவனியாமல் மிகவும் அசட்டையாகவும், பிடிவாதமாகவும் இருந்தாலும் இத்தகைய பல காரணங்களால் இரு தம்பதிகள் தம் மணத்தை ரத்து செய்துகொள்ள ஏதுவாகும். இன்னும் சில நாடுகளில் வாழ்நாள் முழுதும் சிறைச்சாலையில் இருக்கவேண்டுமென யாதானும் ஒருவர் தண்டனையளிக்கப்படுவரேல், சட்டத்தின்படி அதே நிமிடத்தில் அத் தம்பதிகளின் மணம் ரத்து செய்யப்பட்டதாகும். மற்றும் திருட்டுக்குற்றத்திற்கும், இழிவான குற்றங்கட்கும் தண்டிக்கப்படினும் அவர் மணக்கட்டு விலக்கப்படும். சில மாகாணங்களில் நீதிபதியால் வழங்கப்படும் இம்முறைகளேயன்றி அந்நாட்டுச் சட்டசபைகளும் இரு தம்பதிகளின் மணத்தை விடுதலைப்படுத்துகின்றன. இவ்விதமாக டிலாவேர் (Delavare) என்னும் நாட்டில் 1887வது ஆண்டிற்கு முன்னர் இருபது வருடங்களில் ஏற்பட்ட ரத்துக்களில் ஐந்தில் நான்கு பாகம் சட்டசபை மூலமாய் அளிக்கப்பட்டவை. மற்றும் நம் நாட்டிலும், இங்கிலாந்திலும் உள்ளபடி அமெரிக்காவிலும் சட்ட விலக்கு (Judicial Separation) என்பதும் உண்டு. இதுவரைக்கும் நாம் சுருக்கமாகக் கண்டவை ரத்துப்பெருவதற்கு வேண்டிய மிகவும் முக்கியமான காரணங்களாகும். இனி, பல மாகாணங்களிலும் மிக அற்பமான காரணங்களுக்கும்

ரத்து அளிக்கப்படுகின்றது என்பதைக்காட்டும்பொருட்டு அமெரிக்கா அரசாங்கத்தின் அதிகாரிகளின் அறிக்கையிலிருந்து இரண்டொரு விஷயங்களைக் கூறுவோம். ஒரு மனைவி தன் கணவன் அவளது தங்கையைத் 'திருடி' என்று கூப்பிட்டதற்காகத் தன்மனமானது புண்பட்டதெனவும், அது காரணமாகத் தம் மணம் ரத்து செய்யப்படவேண்டுமெனவும் வேண்டி அவ்வாறே ரத்தும் பெற்றனள். மற்றொருவள் தன்னைத் தன் கணவன் கலியாணமான நாளிலிருந்து ஒரு முறையாவது வாகனங்களில் வைத்துக்கொண்டு வெளியே போனதில்லை யெனவும் அது தனக்குக் கூறமுடியாத மனச் சஞ்சலத்தைத் தந்ததால் தம்மணம் ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் கூறுகின்றாள். வேறொருவள் தன் புருடன் சரிவர ஸ்நானம் செய்து உடம்பைக் கழுவிச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதில்லை எனவும் அதன் காரணத்தால் தனக்கு மிகப்பெரிய சஞ்சலம் ஏற்பட்டு விட்டதெனவும் முறையிடுகின்றாள். இன்னுமொருத்தி, தன் கணவன் சதா காலமும் வேதத்திலிருந்து பாட்டுகளைக் கூறி எவ்விதம் மனைவி கணவன் சொற்படி கேட்டுப் பணிவாக நடந்துகொள்ள வேண்டுமென இடையறாது அறிவுறுத்திக்கொண்டே வருகின்றதாகவும், அதனால் தனக்குநேரும் மனக்குழப்பம் அதிகம் எனவும் அழுது ரத்தைப் பெறுகின்றாள். கடைசியாக, ஒருத்தி தன் புருடன் தினந்தோறும் இரவு மணி பத்தடித்த பின்னரே தன் வீட்டுக்குத் திரும்பி வருகின்றான் எனவும், அவ்வாறு தாமதமாகி வந்தும் அவளோடு முணுமுணுவென்று இரவு முழுவதும் தூங்க விடாமல் பேசிக்கொண்டே இருக்கின்றான் எனவும் கூறுகின்றாள். மற்றும் அவன் ஒரு மதுபானக் கடை வைத்திருப்பதாகவும், அவ்வாறு அவன் செய்வது தன் மனத்திற்குக் கஷ்டத்தை யளிக்கின்றது என்று அவள் கூறுவாளேல் அவன், 'அவள் அவ்வாறு தன்மீது, தற்போது செய்யும் தொழிலுக்காகக் கோபித்துக் கொள்ளலாகாதெனவும் இன்னும் சிலநாளில் அதை விடுத்து வேறு மேன்மையான தொழில் செய்ய

ஏதுவாகும், எனவும் கூறுகின்றதாகவும் முறையிடுகின்ருள். இது ஒரு குற்றம் எனவும் அதற்காக மணரத்து செய்யப்பட வேண்டுமெனவும் வேண்டுகிருள் அப்பெண். மற்றும் எண்ணிறந்த பல ரத்துக்கள் இதே போன்ற கேவலமானதும் அற்பமானதுமான காரணங்களுக்காக அல்லது காரணமின்மைக்காக) அளிக்கப்படுகின்றன.

விவாக ரத்து அளிக்கப்படும் காரணங்கள் மட்டும் தான் அமெரிக்காவில் உள்ள அக்கிரமங்களுக்கு அடிப்படை என்று கூற முடியாது. அஃதோடு ரத்துப்பெறும் வழியும் மிகவும் விரும்பத்தகாதபடி கேவலமான நிலைமையிலுள்ளது. விவாகரத்தை யளிக்கும் நீதிபதிகள் நாட்டிலுள்ள சிறிய நியாஸ்தலங்களில் உள்ளவர்கள்; அவர்களது சட்ட ஞானமோ அற்பமானது. ஒரு அமெரிக்கா தேசப் பேரறிஞர்(Mr. Newton Baker) கூறுவதைப்போல,விவாகரத்துப்பெறுவதானது அதை வழங்க ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு அதிகாரியின் மனப்பான்மை, இஷ்டம், குணம் இவைகளைப் பொறுத்ததாயிருக்கின்றது. இந்த விஷயத்தை நன்கு அறிந்த வழக்கறிஞர்கள், சர்வ சாதாரணமாகவும், எந்த நீதிபதி ரத்தை அளிக்கக் கூடியவரோ அவர் முறை வரும் வரையிலும் தம்விவாகரத்து வழக்கு விசாரணையை ஒத்திவைத்துக் கொண்டே செல்லும் ஒரு சூழ்ச்சியைக் கையாண்டு வருகின்றனர். நீதிபதிகளில்அனேகர் விவாகரத்து வழக்குகளில் மனித சமூகத்திற்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் இருக்கும் விஷயம் அபாயத்திலிருக்கின்றது, அதனுல் மனம் போனபடி சட்டத்தைக் கையாளுதல்பெருந்தவறு என்னும் உயரிய உண்மையை உணராதிருப்பது மிகவும் வருந்தத்தக்கதே. அவர்கள் தம்பதிகளுக்காகவோ அல்லது வழக்கறிஞரின் தாட்சண்யத்திற்காகவோ நியாயமான வழி தப்பிப் பலரத்துக்களை அசட்டையாய் அளிப்பது தான் அமெரிக்காவில் உள்ளகேவலமான நிலைமைக்குக்காரணம் என மேலே கூறிய திரு. பேக்கர் அபிப்பிராயப்படுகின்ருர்.

மற்றும், மணரத்து வேண்டுவோர் அவ்வருகதைத யைப் பெறுவதற்குச் சில காலம் அப்பிரதேசத்தில் வசிக்கவேண்டுமென ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு சட்டம் உண்டு. அத்தகைய காலம் பலவிடங்களில் மிகவும் குறுகியதாயிருப்பதால் ஏராளமான மணரத்துக் கள் பெறஎளிதாகின்றது. இருதம்பதிகளில் ஒருவர் மணரத்து வேண்டுமெனக்கேட்டால் நீதி மன்றத்தார் மற்றொரு தம்பதிக்கு நோட்டீஸ் கொடுத்து அறிவிக்கும் முறை மிகவும் போதாததாகும். பத்திரிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தி மற்றொருவர் வந்து சேராவிடின் அவரது மணரத்து செய்யப்பட்டு விடுகின்றது. சுருங்கக் கூறுமிடத்து, இத்தகைய வழிகளால் ஏற்படும் நிலைமை என்னவென்றால், இருதம்பதிகள் தம்முள் மனமொத்துத் தம்மணத்தை ரத்து செய்து கொள்ளலாம் என நிச்சயிப்பின் நீதிமன்றம் மிக எளிதாக அத்தகைய ரத்தை அங்கீகரித்து விடுகின்றது. வெளிப்படையாக வும் நேராகவும் சட்டம் இத்தகைய நிலைக்குச் சம்மதப் பட்டதில்லையாயினும், அது அமுலில் கொண்டுவரப்படும் வழி இந்நிலைக்கே மக்களைக்கொண்டு செல்லுகின்றது. ஒரு தம்பதி ஒரு பிரதேசத்திற்குச்சென்று சட்டம் வேண்டும்படியான மிகவும் சிறிய காலம் தங்கியிருந்து மற்றொரு தம்பதியில்லாவிடினும் தம் மணரத்து செய்து கொள்ளும்படியான இப்பழக்கம் மிகக்கொடியதாக இன் றும் வழங்கி வருகின்றது. அமெரிக்காவில், இவ்வாறு ஒரு மாகாணத்தில் செய்யப்பட்டரத்து பொதுவாக மற் றெல்லாமாகாணங்களிலும் செல்லும் பான்மையதாகும். ஆகவே நாம் இதுவரைக்கும் சுருக்கமாகக் கண்டது என்னெனின், மணரத்துச்சட்டம் மாகாணத்துக்கொன்று என்றிருப்பதும், மணரத்து அளிக்கப்படும் காரணங்கள் எண்ணிறந்தனவும், அற்ப குணத்தனவும் ஆக இருத் தலும், அவ்வாறு மணரத்துப்பெற வழக்கத்திலிருக்கும் சட்டவழி (Procedure) முதலியன மிகவும் கேவல மானதாகவும், நெகிழ்ச்சியுடையதாகவும் இருத்தலும் ஆகிய மூன்று முக்கிய காரணங்களால் தான்

அமெரிக்காவில் உள்ள மணரத்துச் சட்டத்தின் நிலையும் முறையும் இவ்வளவு இழிவானதாகவுள்ளது என்னும் பெரிய உண்மையேயாகும்.

இந்தியாவிற்கேற்ற சட்டம் ஏற்படுத்தலாம்.

நம் தேசத்தில் இவ்விதமான மூன்று குற்றங்களும் உண்டாகாதபடி பார்த்துக் கொள்ளுதல் மிக எளிது. அவ்வாறு நாம் இவைகட்கிடங்கொடாத படி சட்டம் முதலியவற்றையமைத்துக்கொள்ளுவோமேயானல் அமெரிக்காவில் நேரும் குற்றங்கள் இந்தியாவில் உண்டாக இடம் இராது என்பது திண்ணம். ஏனெனில் இப்பொழுதும் கூட விவாகம் முதலிய விஷயங்கள் இந்திய சட்டசபையின் கைவசம் இருக்கின்றதேயொழிய ஒவ்வொரு மாகாண சட்டசபையினிடம் இல்லை. இது ஒரு பெரிய நன்மையேயாகும். இந்தியா முழுமைக்கும் (இந்துக்களுக்கு) ஒரே மணரத்துச்சட்டம் ஏற்பட்டு அது விஷயத்தில் ஒரு குழப்பமும், குற்றமும் ஏற்பட ஏதுவிராது. அவ்வப்போது விவாகரத்துச் சட்டத்தை மாற்றவும் நீக்கவும் மிக எளிதாகவும் இருக்கும். இரண்டாவது, ஒரே சட்டம் ஏற்பட்ட மாத்திரத்தில் அதை அமுலுக்குக் கொண்டு வருமுறையும், வழங்கப்படும் வழியும் மிகச்சரியானதாகவும் நெகிழ்ச்சியில்லாததாகவும் ஏற்பட அளவற்றவசதியுண்டு. இங்கிலாந்து முதலிய தேசங்களில் இருப்பதைப் போல அச்சட்டம் வழங்கப்படலாம். மூன்றாவது, நாம் அமெரிக்காவில் காணும் அற்பமானவையும், அக்கிரமமானவையுமான காரணங்கள் பலவற்றை அறவே ஒழித்து மிகவும் முக்கியமும், மேன்மையும் இன்றியமையாமையும் உடைய, தலை சிறந்த, நியாயமுற்ற காரணங்களை விவாகரத்து வழங்க அவசியமானவை என வைத்துக்கொள்ளலாம். அவ்வாறு செய்தல் மிக எளிது. ஆகவே அமெரிக்காவில் காணும் குறைகளையும் குற்றங்களையும் அற

வேயொழித்து விவாக விடுதலைச்சட்டம் நம் நாட்டின் சமூக நிலைமைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளுதல் மிகவும் எளிதாகும். அவ்வாறு செய்து கொள்வோமானால் அமெரிக்காவைப்போல் நாமும் ஒழுக்கத்திற்குறைவதற்கு ஒருக்காலும் இடமிராது என்பது திண்ணம்.

அமேரிக்கர்களது ஒழுக்க நிலைமையின் காரணங்கள்.

அமெரிக்கர்களது நாகரீகம், செல்வநிலை, வாழ்க்கை முறையாகிய அனைத்தும் அவர்கள் தம் விவாஹரத்து முறையை அபரிமிதமாகக் கையாளுவதற்குச் சாதகமாக இருந்து வருகின்றன என்னும் உண்மையைப் பலர் உணர்வதில்லை. விவாகரத்துச் சட்டம் என்பதே ஒன்றுமில்லை என்றிருந்த போதிலுங் கூட அத்தேசத்தில் இப்போது காணப்படும் அக்கிரமங்களும், ஒழுக்கக்குறைவுகளும் ஏற்படுவதற்கு ஏராளமான இடமும், வசதியும் உண்டு என்பதை எவரும் மறுக்கவே முடியாது. நியாயமாக நாம் இப்போது கேட்கவேண்டிய கேள்வி என்னவென்றால், அமெரிக்கர்களது ஒழுக்கம் இப்போதுள்ள நிலைமைக்குக்காரணம் அத்தேசத்தில் வழங்கப்படும் விவாகரத்து முறைகளா அல்லது அமெரிக்கர்களது அளப்பரும் செல்வப் பெருக்கமும் சிறப்பின் வாழ்வுமா? என்பதே யாகும். உலகத்தில் உள்ள தேசங்கள் எல்லாவற்றிலும் அமெரிக்காவிலேதான் பெண்மக்கள் தற்காலம் செல்வாக்குடனும், சிறப்புடனும், சுதந்திரமிக்க மேன்மையுடனும் இருந்து வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்தவிஷயம். மாதர்தம் சுதந்திரம் மடைதிறந்தோடும் அத்தேசத்தில் எண்ணிறந்த பெண்கள் தமக்குரிய சுயேச்சையையும், சுதந்திரத்தையும் சற்று அபரிமிதமாகக் கையாண்டு விடுவார்களேல் இது ஒரு வியப்பாகாது. அதுமட்டும் அல்ல. (Lord Bryce) லார்டு ப்ரைஸ் என்னும் ஓர் பேராசிரியர் கூறுவதைப்போல, எந்த ஒரு மனிதனுக்கோ அல்லது சமூகத்திற்கோ முழுச் சுதந்திரமும், அத்துடன் வேண்டிய வேண்டி

யாங்கியற்றுதற்குரிய வழிகளும் இருந்து விடுமேல் அம்மனிதனே, அச்சமூகமோ சட்டம், சமூகக் கட்டுப் பாடு என்னும் வரம்புகளை மீறி நடப்பது மாந்தரியல்பு ஆகுமன்றோ? இவ்விரண்டு பொருட்களும் ஏனைய நாட்டினரைக் காட்டிலும் அமெரிக்கர்களிடத்து அளவு கடந்து அதிகமாகவே இருந்து வருகின்றன. நால்வருக் கொரு மோட்டார் வண்டி வைத்து நாகரீகமாய் வாழும் செல்வப் பெருக்கும், நாடு முழுவதும் ஏழைகளே மருந் துக் கேனும் காணவொண்ணுத நற்பேரும் நனி நிறைந்த அத்தேசத்தில் லௌகீகத் தன்மையும், மறுமையை மறந்து இம்மையில் நாட்டமும், இம்மையிற் கண்கூடாகக் காணும் இன்பங்களில் தேட்டமும் கொண்டு மக்கள் திரிவாரேல் இஃது ஓர் இறும்பூது பயக்கும் இயல் புடைத்தோ? அஃதா அன்று.

அமெரிக்கா தேசமக்கள் தினந்தோறும், மணிதோ றும், பத்திரிக்கைகள் பயிலும் பாற்றனர். பத்திரிக்கை களில் வெளிப்படுத்தப்படும் மனக் கிளர்ச்சியையும் மனத்தூண்டுதலையும் உண்டாக்கும் தன்மையான (Sen-sational) செய்திகள் அதை வாசிப்போரது உள்ளத்திற் பட்டு, அவ்வாறே தாமும் மனக்கிளர்ச்சியுண்டு, நூதன மும், வியப்புந் தரக்கூடிய காரியங்களைச் செய்ய அவர் களைத் தூண்டுகின்றன. இவ்வாறு அவர்கள் இன்பம் என் னும் இலட்சியத்தையே இடைவிடாது பின்பற்றி, என் னுளும் ஒழுக்கத்தில் கவனமின்றி நடந்து வருவதைச் சட்டமோ மதமோ சற்றேனும் தடுக்க முடியாது. கிருஸ்துவ மதம் தனது உயரிய ஒழுக்கக் கொள்கைகளை இத்தேசத்தில் முழுதும் செலுத்தவோ அல்லது நிலை நாட்டவோ எவ்வளவு முயன்றும் பயன்படவில்லை என்றேதான் கூற வேண்டும். லௌகீகத் தெய்வமாகிய "பொன்" "சுகம்" என்னும் பொருள்கள் பால் மோக மிக்க மக்கள் ஏழ்மையையும், ஏழ்மையைப் போதிக்கும் கிருஸ்துவ மதத்தையும் நனிமதியார் என்பது திண் ணம். இதுபற்றியேதான் கவி ரவீந்திரநாத் தாகூர்

'இன்றயதினம் அமெரிக்காவில் கிருஸ்துவே நேரில் வந்து 'ஏழைகளே இன்ப வாழ்வினர் (Blessed are the Poor) என்று கூறுவாராகில் அவரை ஒரு பொருளாதாரத்து வேஷி' (Economic Heretic) என்று நாட்டைவிட்டுத் துரத்திவிடுவார்கள் அத்தேச மக்கள், என்ற மிக உண்மையாகவே உரைத்துள்ளார். ஆகவே அமெரிக்கர்களது தற்கால நிலைக்குக் காரணங்கள் இவ்வளவு இருப்ப, இவைகளில் யாதேனும் ஒன்றும் இல்லாத நம் இந்தியாவில் ஆங்கேபோல் ஒழுக்கக்குறைவு ஏற்பட்டுவிடும் என்று எண்ணுதல் ஓர் பெருந்தவருகும்.

இந்து சமூகத்தில் ஒழுக்கக் குறைவு ஏற்படாது.

நமது இந்தியாவிலோ எனின் பகலவன் கீழ்த்திசைத் தோன்றி மேற்றிசையில் மறையும் வரையில் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுழைத்து வயிறு வளர்த்து வாழ்ந்து (அல்லது இறந்து) வரும் மக்கள் கோடிக்கணக்காக நிறைந்துள்ளனர். இவர்கள் எல்லையற்ற இன்ப வாழ்வில் நாட்டம் கொண்டு திரிவதென்பது எண்ணத்தகாததாகும். மற்றும் நம் இந்தியர்கள் சட்டம், சமூகம் இவைகட்கு மற்றெத்தேசத்தினரைக் காட்டினும் அதிகமாக அடங்கி நடக்கும் தன்மையினர். அமெரிக்கர்கள் எவ்வளவுக்கெவ்வளவு இயல்பாகவே சட்டவரம்பை மீறும் தன்மையிலிருக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு இந்தியர்கள் சட்டத்திற்கு அடிமையராகிக்கிடக்கின்றனர். ஆகவே அவசியமான காரணங்களுக்கு விவாஹரத்து வழங்கப்படும் என ஒரு சட்டம் நிறுவப்பட்டால் இதை மீறி நம் மக்கள் ஒருக்காலும் நடவார் என்பது சிந்திப்போர் ஒவ்வொருவருக்கும் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின் விளங்கும். சாதாரணமாகக் கோடிக்கணக்கான இந்தியர்கள் பத்திரிகை படிப்பதும் இல்லை. அவற்றிற்காணும் கிளர்ச்சியான செய்திகளைக்கண்டு மனப்பதைப்பு முதலிய நிகழ்ச்சிகள்

பெறுவதுமில்லை. நூற்றுக்கு ஐந்து பேருக்கு மேல் எழுதப்படிக்கத்தெரியாத இந்தியாவில் அமெரிக்கா வில் ஏற்படும் சங்கடங்கள் ஏற்பட ஏதுவாகும் என்று எண்ண இடமில்லை. இந்தியப் பெண்மக்கள் இன்னும் தமது இயற்கையான சுதந்திரத்தையே யடையாமல் பிற்போக்கான நிலைமையில் இருந்து வருகின்றனர். ஆகவே விவாஹவிடுதலைச்சட்டம் என்று ஒன்று ஏற்பட்டு விட்டகாரணத்தால் மட்டும் நம்நாட்டு மாதர்கள் அமெரிக் கப் பெண்களைப்போல அஞ்சாமல் வெளிவந்து தம் விவா ஹத்தைப்பன்முறை ரத்து செய்துகொண்டு காதலுற்ற ஆண்மகனை எல்லாம் கலியாணம் செய்துகொள்ள முற் படுவர் என்று அஞ்சுவதும், ஐயுறுவதும் பெருந்தவறே யாகும். அச்சம், மடம். நாணம், பயிர்ப்பு என்னும் அரிவையர்க்கேற்ற அருங்குணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற நம் இந்தியப் பெண்மக்கள் தற்காலம் இருப்பதைக்காட்டிலும் எவ்விதத்திலாவது கீழான யீனவொழுக்க நிலைக்குச்சென்று விடுவர் என்று எந்த மனிதனும் கூற ஒருக்காலும் முன்வரமாட்டான். இந்திய மாதர்க்குற்ற இணையரும் அணிகலன் நாணம் (Modesty) ஒன்றேயாகும். இத்தகைய மாதர் நாளைய தினம் விவாஹரத்தைச் சட்டப்படி (அவர்தம் இட்ட படியன்று) பெறுவதற்கு முற்படுவாரேல், அது அம் மாதர் தம் மதியீனத்தைக்காட்டியதாகாது. அது அவர் சிக்கியுள்ள விவாக முறையின் குற்றத்தையே குறிப்பிடு வதாகும். இப்போது நாம் நமது வாசகர்களை ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது இந்தியப் பெண்கள் அனைவரும் இப்போது கற்புக்கரசியா அல்லவா? அவர் கற்புக்கரசியரே என்னும் விடை அழுத்தந் திருத்தமாக நம்வாசகர்கள் நாவினின்று திடீரென உதித்தலை நாம் அறிவோம். அப்படியானால் நீங்களே ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் என்று ஒப்புக்கொண்ட மாதர் தக்ககார ணத்தால் தமக்கென ஏற்பட்ட சட்டப்படி தம் விவா கத்தை ரத்து செய்துகொண்டால் அவர்களை நாம் ஒழுக்கம் அற்றவர்கள் என்று உரைப்பது பிழையாகும்.

யனெனில் நல்லார் செய்வது நலமேயாகும். அவ்வாறின்றி அவர்கள் இதில் மட்டும் பிழை செய்யக் கூடும் என்பீராகில் அவர்கள் உத்தமப் பெண்கள் என்று நாம் முதலில் உறுதியாய்க் கூறவொண்ணாது.

நிற்க, சிலர் கேட்கலாம்: "இது காறும் இவ்விவாகரத்து முறையேயில்லாமல் நமது இந்து சமூகம் இருந்து வரவில்லையா? இப்போது ஏன் இதை நுழைத்து வீண் விழுப்பம் உண்டாக்க வேண்டும்?" இவர்கள் ஒரு புலவர் கூறுவதைப் போல இப்போது 'உள்ளவை யெல்லாம் உத்தமமானவைகளே' என்னும் கொள்கையினர். ஆனால் இவர்கள் வழக்கம் என்னும் கயிற்றால் கட்டுண்டுள்ள தம்மனத்தை விடுவித்து தம் மனசாட்சிக் கொப்ப யோசித்துப் பார்ப்பார்களேயானால் இவர் தம் கேள்வியின் குற்றம் வெளிப்படாமற் போகாது. எந்தச் சுகத்தையும், எந்த இன்பத்தையும் ஒரு விவாக முறையானது உண்மையாக ஒரு சமூக மக்களுக்கு அளிக்க வேண்டுமோ, எந்த இன்பத்தையும் எந்தச் சுகத்தையும் நமது முன்னோர் நமக்கு அளிக்கவேண்டுமென விழைந்தனரோ, அவை இரண்டையும் நமது விவாஹமுறை நமது தம்பதிகளுக்கு, அதிலும் பெண்பாலார்க்கு அளிக்கவேயில்லை என்பது திண்ணம். 'காணேம்' என்று கண்களை மூடிக்கொள்ளும் குருடர்களன்றி 'கேளோம்' என்று செவிகளை யடைத்துக்கொள்ளும் செவிடர்களன்றி ஏனைய யாவரும் நமது நாட்டில் தினந்தோறும் நம்மைச் சுற்றி நடந்துவரும் காட்சிகளைச் சற்று கவனிப்பின் நம் விவாஹமுறை நல்லது அன்று என்று விளங்காமற்போகாது "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல்தலை" என்பதற் கேற்றவாறு பொறுமையோடு இருந்து, வன்கொடிய கணவர் தம் இச்சை தீர்க்கும் வாழ்க்கையேயன்றி வேறு வழியில்லாது தவிக்கும் பெண்மக்கள் பெரும்பாலும் தமது அபிப்பிராயத்தை வெளியிடுவதில்லை. இருந்தபோதிலும் நமது தேசத்தில் தினந்தோறும் நாம் கண்கூடாகக்

காணும் பெண்மக்கள் தற்கொலைகளின் தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு தம் கணவருடன் இனிவாழ முடியாது என்ற காரணத்தைக்கொண்டதாகும். இதற்கு உதாரணம் கொடுப்பது மிகையாகும். இதுமட்டுமன்று. சற்றுதாழ்ந்த சாதியினர் என்று கூறப்படும் பெண் மக்கள் தம்கணவரை விடுத்து நகரங்களில் உள்ள விபசார விடுதிகளிற் சென்று தம்மானத்தை விற்று கேவலமாய் பிழைப்பதற்கும் முக்கியமான காரணம் நம் விவாகமுறை சரியானபடி இல்லை என்பது ஆகும் என்பது உண்மை யுணர்ந்தார் தம் உறுதியான முடிவு. மற்றும் கணவன் வீட்டில் "காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுப் பட்டு" வாழமுடியாமல்,கணவனின் கொடுமையான நடத் தையின் காரணத்தாலோ அல்லது கணவன் தன்னைவிட்டு வேற்றிடம் போய்விட்ட காரணத்தாலோ தன் தாய் தந்தையார் வீட்டில்வந்து தங்கியிருந்து அளப்பரும் மனச்சஞ்சலம் அடைவதேயன்றி, காமநோய்க்கு அடிமையாகித் தன் 'கற்பை' யும் கெடுத்துக் கொள்ளும்மனைவியர் நம் நாட்டில் பலர் உள்ளர் என்பதை எவரேனும் மறுக்கமுடியுமா? நாம் வெளிப்படையாக இவற்றைப்பேச நேர்ந்ததுபற்றி வருந்துகின்றோம் எனி னும் உண்மையைப் பெண்மக்கள் சார்பாகப்பேசுதல் இன்றியமையாததாதலால் இதையுரைத்தேதீர வேண்டி யிருக்கின்றது. இத்தகைய பெண்மக்கள் தொகை வெகு அதிகம் இல்லை என்று சிலர் கூறலாம். அதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால்அத்தொகைஎவ்வளவு சிறியது என்று வைத்துக்கொண்டாலும் அதனால் அவ்வக்குடும் பங்கட்கு விளையும் கேவலமும், மானக்குறைவும் அதிக மா? அல்லது ஒருபெண்ணை பாழ்பட்டமணத்தினின்று விடுவித்து அனைத்துலகும் அறியமற்றொரு ஆண் மகனை மணந்து முதல் மணத்திற்காணு சுகத்தை இரண்டாவது மணத்தில் அனுபவிக்கச்செய்தல் கேவலமா என்று ஒவ் வொருவரையும் நாம் கேட்கின்றோம்?

இதை முடிப்பதற்கு முன்பாக ஜர்மனிதேசத்தில் உள்ள 'ரத்துப்பெற்ற பெண்டிர்களை ரக்ஷிக்கும் சங்கம்'

என்னும் சங்கத்தின் முக்கிய அங்கத்தினராய ஒரு மாதரசியின் வார்த்தைகளை நம் வாசகர்கட்கு ஞாபக மூட்டுகிறோம் "ஒவ்வொரு நூறு கலியாணங்களிலும் தொண்ணூறு மணங்கள் துன்பகரமான நிலையிலுள்ளன; எஞ்சியபத்து மணங்களும் அப்படி அப்படித்தான்" இக்கூற்றுமற்ற நாடுகளைக்காட்டிலும் இந்தியாவிற்கே அதிகமாகப் பொருந்தும்.

விவாக விடுதலை என்ற கேள்வியில் நாம் எவ்வெக்காரணங்களுக்கு ரத்து அளிக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறோம் என்றகேள்வியும் பிறக்கலாம். சுருக்கமாக இதற்கு விடை சொல்லவேண்டுமானால் ஐக்கியமாகாணமாதர்மகா நாட்டில் திருமதி உமாநேருதலைமையின் கீழ் நிறைவேற்றிய தீர்மானப்படி அவசியமாக, விட்டுவிட்டு ஒடிப்போதல், கொடூர நடத்தை என்ற இரண்டு காரணங்களுக்காவது விவாகரத்து அளித்தல் வேண்டும். மற்றும் இவ்வாண்டு நிறைவேறியுள்ள பரோடா நாட்டு இந்து விவாகரத்துச் சட்டத்திற் கண்டுள்ள காரணங்களுக்கும் ரத்து அளிக்கலாம். ஆனால் அச்சட்டம் சற்றும் குற்றமும் நெகிழ்ச்சியும் இன்றி சற்றுக் கடினமாகவே இருத்தல் வேண்டும் என்பது அவசியம். ஆண்களுக்கு அநேக பத்தினிகள் இருக்கும் முறை (Polygamy) இப்போது இருந்துவருவதும் ஓர் பெரிய குற்றம். விவாகரத்துடன் சேர்ந்து ஏகபத்தினியம் என்னும் சீர்திருத்தமும் உண்டாக்கப்படவேண்டும். ஏகபத்தினியம் இல்லாமல் விவாஹரத்து மட்டும் பயன்படாது. மற்றொரு கேள்வியாகிய மணத்தெய்வீகம் என்பதைப்பற்றி முன்னமேயே கூறிவிட்டோம். மணரத்து உண்டான நிமிடத்திலிருந்து அக்கொள்கை அடியோடு அழிபட்டு விடும். எனவே, நமது இந்து சமூகத்திற்கும், அதன் இன்பத்திற்கும், சுகத்திற்கும், இந்து விவாஹ முறையின் மேன்மைக்கும், திண்மைக்கும், அம்முறை நலம்கெட்டு நசியாது நன்மை செய்து நீடித்தற்கும், 'ஒழுக்கம்' என்று நாம் ஓலமிடும்

போலி யொழுக்கம்போய், உயர்வும், புனிதமும் உற்ற உண்மை ஒழுக்கம் ஓங்குதற்கும், திருமணம் என்பது ஒரு தீ என்னும் எண்ணம் நீங்கி, அஃது தெவிட்டாத தேன் பயக்கும் தெள்ள முதக்கிண்ணம் என எல்லாமாதரும் தெளிவதற்கும் இன்றியமையாத சீர்திருத்தம் 'விவாஹ விடுதலை' யேயாகும் என நாம் முழுமனத்தோடு முக்காலும் குன்றின் உச்சியில் நின்று உரக்கக் கூவி இக்கட்டுரையை முடிப்போம். **விவாக விடுதலை என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை.**

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	சரி
2	3	பண்டய	பண்டைய
2	28	வென்றும்	தென்றும்
4	24	அவன்	அவள்
5	1	கருப்புலி	கடும்புலி
5	8	மணம்	மனம்
5	28	அவளைசிரி	அவளைச்சிரி
5	29	வேஞும்	வேனும்
5	கடைசி	யிரு	இரு
6	22	பண்னி	பண்ணி
6	30	மற்ற	முற்ற
8	2	வுரு	வுறு
8	7	பொருப்பு	பொறுப்பு
8	8	பொருப்பு	பொறுப்பு
8	28	தன்று,	தன்று.
19	3	மேண்டு	வேண்டு
10	2	பெறும்	பெரும்
10	26	பிரிவு	பரிவு
10	32	தலைத்' தடை	தலைத்தடை
14	18	மாற்றது	பாற்றது.
29	14	புத்திரா	புத்திரர்
30	19	யுழரும்	யுழறும்
32	18	யிருந்தன	யிருந்தது.
37	25	/பொருமை	பொறுமை
38	31	வசிப்ப	வாசிப்
41	1	பொருத்த	பொறுத்த
41	29	மேற்பட்	மேம்பட்
41	30	பொருத்த	பொறுத்த
42	10	டிருந்து	டிருந்த
44	கடைசி	சல்ப	செல்ப
	12	நிவாஸ்த	நியாயஸ்த

Copies can be had of:—

1. **S. Thangavelu,**
   East Andar St. Teppakulam, Trichinopoly.

2. **The Kudi Arasu Book Depot,**
   Erode.

Price As. 8 only.

முருகவிலாஸ் ஜனனுகூல பிரஸ், திருச்சி.